பக்கங்கள் : பத்து

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 324

சுபர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 03 வெள்ளிக்கிழமை (20.10.2006)

புலிகளின் பேச்சுக் குழு ஜெனிவா செல்ல

பயணப் பாதுகாப்பு உத்தரவாதம் தேவை

விசேட தூதர் போவரிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக்ரோபர் 20

ஜெனிவாப் பேச்சுகளில் பங்கேற்கவுள்ள தமது பேச்சுக் குழுவினரின் பயணத்துக்கு சர்வதேச ரீதியான பாதுகாப்பு உத்தரவாதத்தை புலிகள் கோரியிருக்கின்றனர். பயணப் பாதுகாப்பு ஒழுங்கு மற்றும் சர்வதேச ரீதியான பாதுகாப்பு உத்தரவாதம் என்பன திருப்திகரமாக இருந்தால் மட்டுமே புலிகளின் குழுவினர் பேச்சுக்குச் செல்வர். இது விடயத்தில் புலிகளின் தலைமைப்பீடம் அதிக கரிசனை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் நேற்றையதினம் தம்மைச் சந்தித்த நோர்வேயின் விசேட தூதர் ஹன்ஸன் போவரிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இது தொடர்பாகப் பேச்சு நடத்தியிருக்கிறார்.

ஜெனிவாப் பேச்சுக்கான ஏற்பாடுகளில் ஒரு கட்டமாக மீண்டும் இலங்கை வந்திருக்கும் நோர்வேயின் விசேட தூதர் ஜோன் ஹன்ஸன் போவர் நேற்று கிளிநொச்சிக்குச் சென்றார். அங்கு அவர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினார்.

நோர்வேயின் விசேட தூதருடன் கொழும்புக்கான நோர்வேத் தூதர் ஹன்ஸ் பிரட்ஸ்கரும், தூதரக அதிகாரிகளும் உடன்சென்

(02 ஆம் பக்கம் பார்க்க)

முகமாலையில் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், ஒக். 20

முகமாலையில் படையினரின் பாதுகாப்பு முன்னரங்க நிலைகள் மீது நேற்றுக் காலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும், மேலும் இரண்டு பேர் காயமடைந்தனர் என்றும் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

புலிகள்மேற்கொண்டமோட்டார்தாக்குதலைத் தாங்கள் முறியடித்துவிட்டனர் என்றும் படையினர் தெரிவித்தனர். (ஐ)

மிருசுவில் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்தன

யாழ்ப்பாணம், ஒக். 20

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் அடுத்தடுத்துப் பல ஆட்லறி ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இந்தச் சம்பவத்தில் சிக்கி மிருசுவில் தவசிகுளத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

காலி கடற்கரையோரம் ஒதுங்கிய சடலம் மீட்பு!

கொழும்பு, ஒக்.20

காலி துறைமுகத்தின் கரையோரப் பகுதியில் சடலம் ஒன்று கரையொதுங்கி உள்ளது. இது நேற்றுமுன்தினம் கடற்படைத் தளம் மீது தாக்குதல் நடத்திய தாக்குதலாளிகளில் ஒருவரது சடலமாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் காலி துறைமுகத்தில் 'தக்ஷனா' கடற்படைத் தளம் மீது தாக்குதல் நடத்த 5 படகுகளில் வந்த 15 தற்கொலைக் குண்டுதாரிகளைத் தாக்கிக் கொன்றுவிட்டதாகக் கடற்படையினர் தெரிவித்திருந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கை இணைக்கும் விடயத்தில் பதில்தர அரசுக்கு நவ.7 வரை காலக்கெடு

அதுவரை நாடாளுமன்றைப் பகிஷ்கரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு

கொழும்பு, ஒக்.20

வடக்கு - கிழக்கை முறையான விதத்தில் இணைப்பது தொடர்பில் அரசும், ஜனாதிபதியும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இது விடயத்தில் சாதகமான பதில் ஒன்றை வழங்குவதற்காக அரசுக்கு நவம்பர் 7ஆம் திகதி வரை காலக்கெடு ஒன்றை விதித்திருக்கின்றது.

அரசு மற்றும் ஜனாதிபதி தரப்பிலிருந்து உரிய பதில் கிடைக்கும் வரை - நவம்பர் 7 ஆம் திகதிவரை - நாடாளுமன்ற அமர்வுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து பகிஷ்கரிப்பர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த விடயங்களை அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டாரதலைமையில் கூடியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களின் ஆர்ப்பாட்டம் தொடரலாமென்ற நிலையில் சபாநாயகர் பின் வழியாகவே

(10 ஆம் பக்கம் பார்க்க)

சுற்றுலாத்துறை, வெளிவிவகாரம் உட்பட

ஐ.தே.கவுக்கு 14 அமைச்சுகளை அள்ளி வழங்குகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக்.20

ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவுக்கும் இடையில் பொது இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டிருப்பதை அடுத்து, ஏழு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் உட்பட பதினான்கு அமைச்சுப் பதவிகளையும், அந்த அமைச்சுகளின் பிரதி அமைச்சுப் பதவிகளையும் ஐ.தே.கட்சிக்கு வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வந்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகாரம், சுற்றுலாத்துறை போன்ற அமைச்சுகளும் பிரதிநிதி அமைச்சும் ஐ.தே.கட்சிக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள அமைச்சுகளில் அடங்குகின்றன என்றும் தெரிகின்றது.

ஆளும் ஸ்ரீல.சு.க. - ஐ.தே.க. இடையி

(10 ஆம் பக்கம் பார்க்க)

படுகொலைகள்

சண்டிலிப்பாயில்...

யாழ்ப்பாணம், ஒக்.20

சண்டிலிப்பாய் வடக்கு, ஆழங்குளாய் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் ஒன்றில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த சிவசுப்பிர

(10 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கை பிரிக்கும் நீதிமன்றத் தீர்ப்பு இந்தியாவுக்கு விடுக்கப்பட்ட அறைகூவல்!

மன்மோகன் சிங்கை தலையிடக் கோருகிறார் பழ.நெடுமாறன்

சென்னை, ஒக். 20

வடக்கு - கிழக்கு இணைப்பு செல்லுபடியாகாது என்று இலங்கை உயர்நீதிமன்றம் அறிவித்துள்ள தீர்ப்பு ஈழத்தமிழர்களுக்கு எதிரானது மட்டுமல்ல. அது இந்தியாவுக்கு விடுக்கப்பட்ட அறைகூவலாகும்.

- இவ்வாறு ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார் தமிழ் ஈழ. விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ.நெடுமாறன்.

அவர் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

ராஜீவ் காந்தி - ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின் படி இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டமை செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பு ஈழத்தமிழர்களுக்கு எதிரானது மட்டுமல்ல. இந்தியாவுக்கு விடுக்கப்பட்ட சவாலும் ஆகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு குறித்து இலங்கை அரசு நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவந்தால்

(10 ஆம் புக்கம் பார்க்க)



நேற்று இலங்கை வந்தடைந்த அமெரிக்க ரீஜாங்க இணைச் செயலர் றிச்சட் பௌச் சர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விரோதச் செயல்களுக்கு துணைபோகவேண்டாம் - ஈ.பி.டி.பி

யாழ்ப்பாணம், ஒக்.20

சமூக விரோதச் செயல்களுக்கு எக்காரணம் கொண்டும் துணைபோக வேண்டாம் என்றும்-

அவற்றில் ஈடுபடுவோர் கட்சியின் பெயரை பயன்படுத்துவது தொடர்பாக மக்களை விழிப்புடன் செயற்படு மாறும்- ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கேட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இன்று ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி, பல்வேறு சமூக விரோத சக்திகள் ஆள்கடத்தல், கப்பம் வசூலித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இத்தகைய சில நடவடிக்கைகளின் போது, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பெயரைக் கூறி இத்தகைய சக்திகள், மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தகவல் கிடைத்துள்ளன.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் பற்றிய விவரங்களை கட்சிக்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ தெரிவிக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில்புலிகளால் அறிமுகப் படுத்தப்பட்ட சமூக விரோதச் செயல்களான ஆள்கடத்தல், கப்பம், வரி வசூலிப்புப் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளில் பல்வேறு சமூக விரோதச் சக்திகளும், உதிரிக் குழுக்களும், தனிநபர்களும் ஈடுபட்டு வருவதுடன், அவர்களின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பெயரைப் பாவிப்பதன் மூலம், கட்சியின் மீது களங்கம் ஏற்படுத்த முற்பட்டுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகளை எமது கட்சி ஆரம்பம் முதலே எதிர்த்தும், கண்டித்தும் வந்துள்ளது. இது போன்ற செயற்பாடுகளுக்கு தமிழ் பேசும் மக்கள் எக்காரணம் கொண்டும் துணை போக வேண்டாமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேண்டுகோள் விடுக்கின்றது - என்று அதில் உள்ளது.

புலிகளின் பேச்சுக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிருந்தனர்.

தமிழ்ச்செல்வனுடன் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் சி. புலித்தேவன், இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன், சமாதான செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஆகியோர் பேச்சில் கலந்து கொண்டனர்.

முற்பகல் 10.45 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேச்சு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்தது.

பேச்சின் முடிவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன் விளக்கமளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை -

ஸ்ரீலங்கா அரசினதும், இராணுவத்தினரதும் அத்து மீறல்கள் - பயங்கரவாத நடவடிக்கைகள் -

எமது மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள போக்குவரத்து, பொருளாதாரத் தடைகள் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள மனித அவலங்கள் -

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் -

ஆகியவை பற்றி இன்றைய சந்திப்பில் நோர்வேத் தரப்பினருக்கு விளக்கமளித்தோம்.

ஜெனிவாவில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள சந்திப்புக்கான ஒழுங்குகள் தொடர்பாகவும் இன்றைய சந்திப்பில் எங்களுடன் நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர் கலந்துரையாடினார்.

ஜெனிவாப் பேச்சுக்கு கொள்கையளவில் இணக்கத்தைத் தெரிவித்திருக்கின்றோம். பயணப் பாதுகாப்பு ஒழுங்கு மற்றும் சர்வதேசப் பாதுகாப்பு ஒழுங்கு ஆகியவை தொடர்பில் உத்தரவாதம் இருந்தால்தான் எமது பேச்சுக் குழு பயணிக்கும். பேச்சுக்களில் ஈடுபடுவோர் பற்றியும் பேசப்படும் விடயங்கள் பற்றியும் இன்றைய சந்திப்பில் கலந்துரையாடவில்லை.

எதிர்வரும் நாட்களுக்குள் அது தீர்மானிக்கப்பட்டு நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தெரியப்படுத்தவுள்ளோம்.

வடக்கு - கிழக்கு இணைப்பு விடயம்

வடக்கு - கிழக்கு இணைப்பு சட்டத்துக்கு விரோதமானது என்று எழுப்பப்பட்டுள்ள புதிய பிரச்சினை தொடர்பிலும் நிலைமைகளை சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

சமரச முயற்சிக்கோ, தமிழ் மக்களுக்கான தீர்வை முன்வைப்பதற்கோ ஸ்ரீலங்கா அரசு தயாராக இல்லை. இருக்கப்போவதில்லை. அதனது ஒரு வெளிப்பாடாக இத்தீர்ப்பை சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

வடக்கு - கிழக்கை இணைப்பதோ மாகாண சபையை உருவாக்குவதோ பற்றி நாம் பெரிதுபடுத்தவில்லை.

எங்களைப் பொறுத்தவரை தமிழர் தாயகம் என்பது பிரிக்க முடியாத ஒன்று. பிளவுபடுத்த முடியாத தாயகமாகத்தான் வடக்கு - கிழக்கு உள்ளது.

எமது மக்களின் பூர்வீக வாழ்விடமும், தாயகமும் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழீழ தேசம். இதனை ஸ்ரீலங்கா அரசு பிரிப்பதோ, இணைப்பதோ அவர்களுக்கு உரித்தான விடயமல்ல. ஏனெனில், ஸ்ரீலங்கா அரசின் அரசமைப்பை தமிழ் மக்களோ, நாங்களோ ஏற்றுக் கொள்ளவில்லை.

அந்த அரசமைப்புக்குள் உட்பட்டு தீர்மானங்களை எடுப்பதும், தீர்ப்புக்களை வழங்குவதும் தாங்களே முடிவெடுத்து திருப்திப்படலாகுமே ஒழிய தமிழ் மக்களை எந்தவிதத்திலும் பாதிக்கப்போவதில்லை.

தமிழ் மக்கள் தங்களது ஒன்றுபட்ட தாயகத்தை மீட்டெடுப்பதற்கும் தமது தாயகத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கும் தமது அரசியல் இலட்சியத்தை - உறுதிப் பாட்டை - கொண்டவர்களாக உள்ளனர்.

இதனை ஸ்ரீலங்கா அரசு கொச்சைப்படுத்த முடியாது - நிராகரிக்கவும் முடியாது.

ஸ்ரீலங்கா அரசின் முடிவுகள் அரசின் தோற்றப்பாட்டை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்துவதாக இருக்கும். நாம் சிங்கள இனவாதிகளுடைய வெளிப்பாடாகத்தான் பார்க்கிறோம்.

இரு தரப்பும் நிபந்தனையற்ற வகையில் நேரடியாகச் சந்தித்துப் பேசவேண்டும் என்று சர்வதேச சமூகம் எங்களிடம் வேண்டிக் கொண்டது.

இவ்வேண்டுகோளுக்கு இணங்கவே எமது இணக்கப்பாட்டைத் தெரிவித்திருக்கின்றோம்.

எதிர்வரும் நாட்களுக்குள் ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையைப் பொறுத்துத்தான் அடுத்த கட்ட நகர்வுகளையும், தீர்மானங்களையும் எடுக்க வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன்.

சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு அமைய ஜெனிவாப் பேச்சுக்கு இணங்கியிருக்கின்றோம். மக்களது அவலங்கள், பிரச்சினைகளை சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்துகின்ற ஒரு அரங்காக ஜெனிவாப் பேச்சை நாம் பயன்படுத்த முடிவெடுத்திருக்கின்றோம்.

நோர்வேத் தூதுக் குழுவினர் சம்பூர், முகமாலை உள்ளிட்ட வலிந்த தாக்குதல்கள் தொடர்பிலும் முக்கியமாக வான்தாக்குதல்கள் தொடர்பான ஒட்டுமொத்தமான தமது கவலையைத் தெரிவித்தார்கள்.

யசூசி அகாஷியும் நேற்றைய தினம் (புதன்) இதே போன்ற கருத்தையே வெளிப்படுத்தினார். சுவிற்ஸர்லாந்துத் தூதுவரும் அதே கருத்தைத் தெரிவித்திருந்தார்.

தாமும் ஜெனிவாப் பேச்சுக்குத் தயார் என்று ஸ்ரீலங்கா அரசு கூறியிருக்கிறது. அச்செய்தியை நோர்வேத் தூதுவர் எடுத்துவந்தார்.

நாம் கொள்கையளவில் இணக்கப்பாட்டைத் தெரிவித்திருக்கிறோம். போக்குவரத்து ஒழுங்குகளும் இனிவரும் களச் சூழல்களும்தான் அதனைத் தீர்மானிக்கும்.

ஜெனிவாப் பேச்சில் இணக்கம் காணப்பட்டவற்றை நடைமுறைப்படுத்துவதுதான் யதார்த்தமாக இருக்கும் என்று நாம் நினைக்கிறோம்.

இறுதிச் சந்தர்ப்பம்

நடைபெறப்போகும் பேச்சு ஓர் இறுதிச் சந்தர்ப்பம். இச்சந்தர்ப்பத்தைத் தமிழ் மக்களும், தமிழ் மக்களுடைய தலைமையும் சர்வதேச சமூகத்துக்கு வழங்கியுள்ளது.

சர்வதேச சமூகம் இதில் ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து முன்னேற்றகரமாகக் கொண்டுசெல்ல முயல வேண்டும். ஏனெனில், ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலையைக் கண்டிப்பதுடன் தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதத்தையும், இனப்படுகொலையையும் கண்டித்து அதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு மீது சர்வதேச சமூகம் எடுக்கின்றபோது ஸ்ரீலங்கா அரசை ஓரளவு வழிக்குக் கொண்டு வரலாம்.

இதனை விடுத்து கண்டிக்கின்ற போக்கில் கண்டன அறிக்கைகளை விட்டுக்கொண்டு இருப்பதால் எந்தவித பயனுமில்லை. எமது மக்கள் மீது நடத்தப்படும் படுகொலைகளை சர்வதேச சமூகம் கண்டிக்கவில்லை. ஆனால், ஸ்ரீலங்கா படைகள் மீது தாக்குதல்கள் நடைபெற்று பின்னடைவுகளைச் சந்திக்கின்றபோது இருதரப்பும் மோதல்களை நிறுத்த வேண்டும் என்பது போன்றுதான் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் உள்ளன.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை யதார்த்த ரீதியாக விளங்கிக் கொண்டு சர்வதேச சமூகம் நேர்மையான முறையில் நிலைமைகளை அணுகவேண்டும். ஜெனிவாப் பேச்சில் கூட இதைத்தான் வலியுறுத்த இருக்கின்றோம்.

காலம் கடத்த முடியாது

பேச்சு என்று கூறிக்கொண்டு ஸ்ரீலங்கா அரசு ஒரு கால இழுத்தடிப்பை இனியும் செய்யமுடியாது.

ஏனெனில், ஸ்ரீலங்கா அரசின் கபட நோக்கத்தைத் தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்திருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுடைய வாழ்விடங்களை ஆக்கிரமிப்பதற்கும், தமிழ் மக்களுடைய எதிர்காலத்தைச் சூனியமாக்குவதற்கும் எப்படி முயன்று கொண்டு இருக்கின்றது என்பதை தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கின்றனர்.

ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் இந்த ஆக்கிரமிப்பிலிருந்து தமது சுதந்திரத்தை உறுதி செய்வதற்கான உரிமைப் போராட் டத்தை வென்றெடுப்பதற்காக அணி திரண்டு கொண்டிருக்கின்றனர்.

இக்கட்டத்தில்தான் நேரடிப் பேச்சுக்கு ஸ்ரீலங்கா அரசு இணங்கியிருக்கின்றது. எம் மக்களின் எதிர்கால நலன்களை இப்பேச்சு [illegible] உறுதியாக இருக்கின்றோம்."

என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன்.

(ஐ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியேட்டி அழைப்பு

கடந்த 20.09.2006 சனிக்கிழமை காலமான எமது குலவிளக்கு

திருமதி இராசேந்திரம் விஜயகலா

திதி: அபரபக்க சதுர்த்தசி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 20.10.2006 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இக்கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சிறப்பாவளை, கொற்றாவத்தை.

ச.இராசேந்திரம் குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

சின்னத்தம்பி நடராசா

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் பெரிய மதவடி உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராசா 18.10.2006 புதன்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மதியம் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரிய மதவடி, சுன்னாகம்.

தகவல்: கண்ணன் (மகன்- விவசாய பீடம்)

திருமதி சுப்பிரமணியம் அருள்நேசராணி (செல்வம்)

விசுவமடுவைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் அருள்நேசராணி நேற்று (19.10.2006) வியாழக்கிழமை விசுவமடுவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - அன்புமலர் தம்பதியரின் அன்பு மகளும் துணைவியைச் சேர்ந்த காலஞ் சென்ற சடையர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சசிகுமாரின் அன்புத் தாயுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் விசுவமடுவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம். (54528)

தகவல்: சோமன் (S.M.R - மகேந்தன்)

தர்மலிங்கம் சின்னையா (ஆசாரி)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்தவிநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சின்னையா நேற்று (19.10.2006) வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான தர்மலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் சற்குணராசா, தேவராஜா (மலேசியா), விஜியகுமாரி, தர்மராஜா (ஜேர்மனி), சிவராஜா (மலேசியா), ஜெயக்குமார், காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் அகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி, ஜெயந்தி, பெயாட்டா (ஜேர்மனி), குமுதரஞ்சனா, துஷ்யந்தி ஆகியோரின் பாசமிகு மாமனும் ரஞ்சன், ஜெயந்தன், முகுந்தன், மயூரி, சாளினி, கிருஷ்ணராணி, தவம், பரத்குமார், ராஜப்பிரியன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18A, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (54524)

தகவல்: குடும்பத்தினர்.

அந்தோனிப்பிள்ளை பெனடிக்ற் இரத்தினம்

தவசிகுளம் மிருசுவிலைச் சேர்ந்த அந்தோனிப் பிள்ளை பெனடிக்ற் இரத்தினம் 18.10.2006 புதன்கிழமை மிருசுவிலில் அகால மரணமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் திருமதி வினிவிறேற் அற்புதராணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற திரு.திருமதி சூசைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கலிஸ்ரா (கனடா), கமிலஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நீலோனின் (கனடா) மாமனும் நெவினின் அருமைப் பேரனும் பீற்றர் ஜெயராஜா (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் - கனடா), அல்பிரட் யோகம் (நகரசபை அனுவலகம் - சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி மரிய நாயகம் (கனடா), காலஞ்சென்ற திருமதி செபஸ்தியாம்பிள்ளை, அல்பிரட்துரைராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் மரணச் சடங்குகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று நேற்று (19.10.2006) வியாழக்கிழமை மிருசுவில் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர். (சி-51193)

தகவல்: அ.அல்பிரட் யோகம், சமாதான நீதிவான்-மிருசுவில்.

செபஸ்ரியாம்பிள்ளை ராசாத்தி (சின்னப்பிள்ளை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் 53, இராஜேந்திராவீதி, யாழ்ப்பாணத்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை ராசாத்தி (சின்னப்பிள்ளை) நேற்று (19.10.2006) வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர்-தங்கம்மா தம்பதியரின் மகளும் கபிரியேல்- ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் செபஸ்ரியாம்பிள்ளையின் (செட்டி) அன்பு மனைவியும் தேவராசா, தவராசா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், அன்னம்மா, காலஞ்சென்றவர்களான ராசன், பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசதுரை (தச்சுவேலை ஒப்பந்தகாரர்), கனகம்மா, பெர்ணான்டோ (ஆசிரியர்), மோசேஸ் (ஆசிரியர்) மற்றும் பிரான்ஸிஸ் (தியாகு) ஆகியோரின் மைத்துனியும் மாலினி (சுவிஸ்), ஜெயந்திரன், அன்ரன் (சுவிஸ்), காலஞ்சென்ற வசந்தி, சுகந்தி (சுவிஸ்), ஜெயந்தி, தமயந்தி ஆகியோரின் பாசமிகு தாயும் சிவரூபன் (சுவிஸ்), பரமேஸ்வரி, ராணி (சுவிஸ்), பொபி (பிரதன் - சுவிஸ்), சசிகரன், நிக்சன் (நித்தி) ஆகியோரின் அன்பு மாமியும் அருண், ரூபினி, அஜித்,மெனிற்றா, டன்சி, முகுந்தன், றோய், ஸ்ரலின், லௌரி, ஸ்ரெபான், நிசா, றொபேட், றெயிஸன், ஒலின்ரன், ஒலின்ரினா, கமில்ரன், அலன்ரினா, கரன்சியா, நிலோஜன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (21.10.2006) சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (54521)

தகவல்: செபஸ்ரியாம்பிள்ளை (கணவர்).

நூறு கிராம் இஞ்சி 200 ரூபாவாக விற்பனை

அரியாலை,ஒக்.20

யாழ். நகர மரக்கறிச் சந்தையில் நூறு கிராம் இஞ்சிக்கிழங்கு இருநூறு ரூபா விலையில் விற்கப்படுகின்றது. தென்பகுதியில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேரும் பயணிகள் சிலர் இந்த இஞ்சிக் கிழங்கை எடுத்து வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-17)

அடிப்படைச் சிங்கள மொழிப்பரீட்சை

கைதடி,ஒக்.20

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கடந்த வருடம் அரச அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட அடிப்படை சிங்கள மொழிப்பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் திருமதி வி.சிவலிங்கம் அவர்கள் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் கடந்த வருடமும் அடிப்படை சிங்கள மொழிப்பரீட்சையில் தோற்றி சித்தி அடையாதவர்களும் தோற்றலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (202-75)

நியமனம்

கைதடி,ஒக்.20

கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகராக ந.ராஜலிங்கம், மகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் பருத்தித்துறை, கோப்பாய், ஆகிய பிரதேச செயலகங்களில் சமூகசேவை உத்தியோகத்தராகவும் யாழ்.மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தராகவும் கடமையாற்றி வந்துள்ளார்.

தற்போது கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் இவர் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தராகவும் பதில் கடமை புரியவுள்ளார். (202-75)

குடாநாட்டில் 500 தொலைபேசிகள் செயலிழந்தன; திருத்தவேலைகள் மந்தகதியில்

யாழ்ப்பாணம்,ஒக்.20

குடாநாட்டில் ஐந்நூறு தொலைபேசிகள் செயலிழந்துள்ளன என ரெலிக்கொம் நிறுவன பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாகப் பரவலாக இடம்பெற்றுவந்த குண்டு வெடிப்புகள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஆகியன காரணமாக கேபிள்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தன என்றும் -

தற்சமயம் மழைகாலம் ஆரம்பித்துள்ளதால், கேபிள்களுக்குள் நீர் செல்வதால் இணைப்புகள் பழுதடைந்துள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த இணைப்புகளைத் திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் -

ஊரடங்கு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவைகள் காரணமாக ஊழியர்களின் வேலை நேரம் குறைந்துள்ளது. அதன் விளைவாகத் திருத்த வேலைகளை விரைவாக மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார். (1)

வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்க மரக்கறி விதைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

'சொண்ட்' நிறுவனம், கிராம அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ், கிராம மட்ட அமைப்புகள் ஊடாக வீட்டுத்தோட்ட விதையினங்களை வழங்கிவருகிறது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சி, கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கிராம அமைப்புகளூடாக விதையினங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வெண்டி, கீரை, தக்காளி, மிளகாய், பூசணி, அவரை போன்ற விதையினங்கள் வழங்கப்படுவதுடன், தேசி, தோடை, கொய்யா போன்றபயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்று மேற்படி நிறுவனம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

இடம்பெயர்ந்த மக்களுக்கு சோஆ நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம்,ஒக்.20

அகதிகளுக்கான பராமரிப்பு நிறுவனம் (சோஆ) கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உணவு மற்றும் அத்தியவசியப் பொருள்களை வழங்கியுள்ளது.

யாழ். அடைக்கல மாதா ஆலயம், கதீனா முஸ்லிம் கல்லூரி, நாவந்துறை பாடசாலை, சந்தன மாதா ஆலயம் ஆகிய முகாம்களில் தங்கியிருந்த 380 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டன.

பானை, வாளி, நுளம்புவலை, சவர்க்காரம், அரிக்கன் லாம்பு, தாச்சி, கத்தி, பாய், சுடுதண்ணீர்ப்போத்தல் என்பன வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியுள்ள வெளிமாவட்ட நோயாளர்களுக்கு உணவும் உணவல்லாத பொருள்களும் வழங்கப்பட்டன என்றும் -

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள முகாம்களில் வாழும் 256 குடும்பங்களுக்கும் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதாகவும் - நிறுவனம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

வடமராட்சியில் முட்டை விலையேற்றம்

பருத்தித்துறை,ஒக்.20

வடமராட்சியில் முட்டையின் விலை உயர்ந்துள்ளதுடன் தட்டுப்பாடாகவும் உள்ளது. கால்நடைத்தீவனத்திற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடால் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை இறைச்சிக்காக விற்பனை செய்துவருகின்றனர். முட்டைக் கோழிகளும் இறைச்சிக்காக விற்கப்படுவதால் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. (202-118)

வீதித் திருத்த வேலைகளை முன்னெடுக்க முடியாதநிலை

மூலப்பொருள்கள் இல்லாமையே காரணமாம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

குடாநாட்டில் வீதித் திருத்த வேலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள் இல்லாமையால் வேலைத்திட்டங்களில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வீதித்திருத்த வேலைகள் தொடர்பாக கேட்டபோது அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் தார், மணல் போன்ற மூலப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் வீதிகளைப் பாராமரித்தல் அவற்றில் ஏற்பட்டுள்ள குண்டு குழிகளைச் சீராக்கல், புதிய வீதிகளை அமைத்தல், இறங்குதுறைகளை விஸ்தரித்தல் போன்ற வேலைத்திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாத நிலை உள்ளது - என்றார். (1-202-88)

உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காதோருக்கு கல்விப் புலமைப்பரிசில் திட்டம்

சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களில் உயர்கல்வி வாய்ப்பற்றிருக்கும் பிள்ளைகளின் நலன்கருதி, சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் 'சமுர்த்தி சிப்தொர' என்னும் கல்விப் புலமைப்பரிசில் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க பிரிவுக்குட்பட்ட கடந்த ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் தோற்றி உயர்தரத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களைப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

விண்ணப்ப படிவத்தை தங்கள் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெற்று பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பிரதேச செயலக சமுர்திப் பிரிவில் உடன் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202)

நாளை

ஐப்பசி 04
சனிக்கிழமை
21.10.2006
திதி : சதுர்த்தசி
முற்பகல்: 08.53
நட்சத்திரம் : அத்தம்
பிற்பகல் : 12.54
தீபாவளி
சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02- 10.32

அதிபர், பிரதி அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

திருகோணமலை,ஒக்.20

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் அதிபர் மற்றும் பிரதி அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவு கோரியுள்ளது.

இவ்வெற்றிடங்களுக்கு இலங்கை நிர்வாக சேவை தரம் III உத்தியயோகத்தர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். ஏற்கனவே தரம் II உத்தியோகத்தர்களே விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும், நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் 9ஆம் திகதி நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவு கல்விப்பணிப்பாளர் கே.முகமட்தம்பி தெரிவித்தார். (202)

வர்த்தக, விஞ்ஞான போட்டிப் பரிசளிப்பு

கல்வியங்காடு,ஒக்.20

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட வர்த்தக விஞ்ஞானப் போட்டிகளில் வெற்றிபெற்றமாண வர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரிய ஆலோசகர் வ.துரைராசசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருத்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கௌரவிருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (79)

பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.20

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முதன்மைப் பெறுபேறுபெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் கா.குமாரவேலு தலைமையில் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பாராட்டு விழாவில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நீர்வேலி பூதர்மடக் கிளையை மீள இயக்குமாறு மக்கள் கோரிக்கை

அரியாலை,ஒக்.20

நீர்வேலி தெற்கு, பூதர்மடம் பகுதி மக்களின் நன்மைகருதி அப்பகுதியில் சங்கக் கிளை ஒன்றை ஆரம்பித்துவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீர்வேலி பலநோக்குக் கூட்டுவுறச் சங்கத்தின் கிளை ஒன்று ஏற்கனவே 1995ஆம் ஆண்டுக்கு முன்னர் அப்பகுதியில் இயங்கி வந்தது.

இந்தக் கிளை தற்போது கந்தசுவாமி கோயிலடிப் பகுதியில் பிறிதொரு சங்கக் கிளையுடன் சேர்ந்து இயங்கிவருவதால், பொருள்கள் விநியோகத்தில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் தமக்குரிய பொருள்களைப் பெறுவதற்குத்தினமும் சங்கக் கிளைகளுக்குச் சென்று ஏமாற்றம் அடைகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-17)

யாழ். பல்கலைக்கழகத்தில் கனகரத்தினா நினைவுக் கூட்டம்

நல்லூர்,ஒக்.20

கல்வியாளரும் ஊடகவியலாளரும் இலக்கியவாதியுமான ஏ.ஜே.கனகரத்தினா நினைவாக அஞ்சலிக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் இடம்பெற்றது.

ஏ.ஜேயின் யாழ். பல்கலைக்கழக நண்பர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு கலைப்பீடாபதி பேராசிரியர் எஸ். சிவச்சந்திரன் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் பதில்துணைவேந்தர் பேராசிரியர் கே.குமாரவடிவேல் ஏ.ஜேயின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

அஞ்சலி உரைகளை திருமதி சாந்தி விக்னராஜா, பதில் துணைவேந்தர் ஆகியோர் நிகழ்த்தினார். (1-202-111)

இலக்கியவாதி ஏ.ஜே. கனகரத்னா நினைவுக் கூட்டத்தில் ஏ.ஜேயின் உருவப்படத்திற்கு யாழ். பல்கலைக்கழக பதில்துணைவேந்தர் பேராசிரியர் கே. குமாரவடிவேல் மலர்மாலை அணிவிப்பதையும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிவச்சந்திரன் தலைமை உரை நிகழ்த்துவதையும் விரிவுரையாளர் சாந்தி விக்னராஜா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 08.09.2006 வெள்ளிக்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

சதாசிவம் சத்தியசீலன் (ரஞ்சன்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (19.10.2006) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் வல்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெற்றன.

சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (20.10.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

347/2, கோயில் வீதி, நல்லூர்,
(துர்க்கா மணிமண்டபம் அருகில்)
யாழ்ப்பாணம்.

(54493)

-குடும்பத்தினர்.

பாடசாலைகளில் புத்தாக்குநர் கழகங்கள்

சகல 1ஏபி, 1சி, தரம் 2 பாடசாலைகளில் இளம் புத்தாக்குநர் கழகங்களை உருவாக்கி போட்டிகளை நடத்துமாறு கல்வி அமைச்சு குறிப்பிட்ட பாடசாலைகளைக்கேட்டுள்ளது.

மாணவர்கள் உலகின் புதிய கண்டுபிடிப்புகளுடன் பழக்கப்படவும், அக் கண்டு பிடிப்புகளுக்கு ஆக்கங்களை சமர்ப்பிக்கும் வகையிலும் இக் கழகங்கள் அமைக்கப்படவுள்ளன.

புத்தாக்குநர் ஆணைக்குழுவுடன் இணைந்து கல்வி அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

(202-182)

செயலமர்வு

கல்வியங்காடு, ஒக்.20

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 10 மற்றும் தரம் 11 இல் மனைப் பொருளியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இராமநாதன் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(202-79)

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 18 - 05 - 1929

உதிர்வு 20 - 09 - 2006

அமரர்

சதாசிவம் வீரசிங்கம்

இளைப்பாறிய பொறியியலாளர்
(தேசிய வீடமைப்பு அதிகார சபை, யாழ்ப்பாணம்)

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்திட்ட எம்சுடரே!
மாதம் ஒன்று சென்றது அப்பா!
மாறவில்லை எம் துயரம்!

அன்னையாய் தந்தையாய் வாழ்ந்து
அன்பையும் பண்பையும் ஊட்டி
அவனிதனில் நாம் வாழ
வழிகாட்டி நின்றவரே

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே

பாசமழை பொழிந்து பாரில்
எமை வளர்த்தீர்கள்
பாசமுடன் நாங்கள் தேட
நீங்கள் மட்டும் எம்மை விட்டு
பிரிந்ததேனோ? உங்கள்
நினைவெல்லாம் எம்
நெஞ்சைவிட்டு நீங்காது.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

70, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவால் தவிக்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(54481)

நெஞ்சைவிட்டகலாத முதலாமாண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 20 - 09 - 1942

ஆண்டவன் அடியில் 31 - 10 - 2005

அமரர்

கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

மண்ணகத்து வாழ்வினிலே யென்றும்
மனிதமுடன் வாழ்ந்திட்ட மாமாவே!
கண்ணெனவே மெய்யென்றும் காத்திட்ட
கனிவார்ந்த காப்பியர் தெய்வமே!
எண்ணமதில் என்றென்றும் நிறைந்திட்ட
என்னுயிர் தம்பியே எங்குசென்றாய்?
வண்ணமுடை வதனமுயர் மாமணியே
மாநிலத்தே யென்றும் மறவோமேயும்மை.

சாந்தி!

18, கதிரவேலு வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

சகோதரி,
மருமகள்.

31 ஆம் நாள் நினைந்துருகலும் நன்றி நவிலலும்

மலர்வு 02 - 10 - 1964



உதிர்வு 21 - 09 - 2006

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும்
அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் தர்மலிங்கம் முரளீதரன்

காலமெல்லாம் உனதன்பில் திழைத்திருந்து
காவலனாய் நீயிருப்பாய் என்றிருந்தோம்
வல்லானனாய் வாழ்வதற்கு மனையமைத்து
வனப்புடனே உயர்ந்ததிலை அகமகிழ்ந்தோம்
எல்லோருக்கு மிளையவனாய் வந்துதித்து
எல்லோருக்கும் முன்போக விதிசமைத்து
பொல்லாத காலனவன் கண்வைத்தானே
பச்சைமரம் உன் தனையே தறித்தே வீழ்த்தி
எமதில்ல இன்பத்தையே அள்ளிச் சென்றான்
செகமதிலே எந்நாளும் கண்ணீர் சிந்தி
உன் நினைவே எம்மனதில் என்றும் வாட்டும்
வையகத்தில் நாம் வாழும் காலம்வரை
எமக்கென்று இனியின்பம் நீயன்றியேது
வானத்து நிலவாக அமர்ந்திருந்து
நாளுமுந்தன் தரிசனம் தான் வேண்டுமையா.

எங்கள் அன்பிற்கினியவரின் அமரத்துவ செய்திகேட்டு எமது இல்லம் ஓடிவந்து எம் துயரில் பங்குகொண்ட அன்பு நெஞ்சங்களிற்கும் பல்வேறு வழிகளிலும் தமது அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

வானுறையும் தெய்வமான எம் அன்புச் செல்வனின்
ஆத்மா சாந்தியுற பிரார்த்திக்கும்.

த.நந்தகுமாரன்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

அன்பு மனைவி,
மகன், குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.slt.lk

வெளிநாட்டுக்கு கதைப்பதற்கு MAX வாசியானது

ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா உட்பட 68 நாடுகளுக்கு
நிமிடத்திற்கு ரூபா. 10/-

தெற்காசியா மற்றும் மத்திய கிழக்கு உட்பட 148 நாடுகளுக்கு
நிமிடத்திற்கு ரூபா. 25/-

ஒரு நிமிடத்திற்கு ரூபா 10/-

மொபைல் தொலைபேசிக்கு ஒரு நிமிடத்திற்கு ரூபா 18/-

அமெரிக்கன் சமோவா	ஜப்பான்
ஆஜென்ரினா	குவைத்
அவுஸ்திரேலியா	கிர்கிஸ்தான்
ஆஸ்திரியா	லாவோஸ்
பங்களாதேஷ்	லக்ஸம்போக்
பெல்ஜியம்	மக்காவூ
பெனின்	மலாவி
பேர்முடா	மலேசியா
பஹாமாஸ்	மரீனா தீவுகள்
பிறேசில்	மொரீசியஸ்
புறூணை	மெக்சிக்கோ
பல்கேரியா	மொங்கோலியா
புறுண்டி	நெதர்லாந்து
கனடா	நியூசிலாந்து / சதம் தீவுகள்
சிலி	நோர்வே
சீனா	போலந்து
கொலம்பியா	போர்த்துக்கல்
கோஸ்ராறிக்கா	ருஷ்யா
குரேஷியா	சான்மரினோ
சைப்பிரஸ்	சிங்கப்பூர்
செக் குடியரசு	தென் ஆபிரிக்கா
டென்மார்க்	தென் கொரியா
இஸ்தோனியா	ஸ்பானியா
பின்லாந்து	சுவீடன்
பிரான்ஸ்	தைவான்
ஜேர்மனி	தாய்லாந்து
கிறீஸ்	கிரேக்கம்
குவாம்	உக்ரேன்
ஹொங்கொங்	ஐக்கிய இராச்சியம்
ஹங்கேரி	யூ எஸ் ஏ
ஐஸ்லாந்து	யூ எஸ் ஏ - அலாஸ்கா
இந்தோனேஷியா	உஸ்பெஸ்கிஸ்தான்
அயர்லாந்து	வெனிசுவெலா - கார்கஸ்
இஸ்ரேல்	வேர்ஜின் தீவுகள் (யூஎஸ்)

ஒரு நிமிடத்திற்கு ரூபா 25/-

மொபைல் தொலைபேசிக்கு ஒரு நிமிடத்திற்கு ரூபா 35/-

ஆப்கானிஸ்தான்	எல் சல்வடோர்	லிபியா	சாவோ ரோம் அன்ட் பிரின்சிபி
அல்பானியா	ஈக்குவட்டோரியல் கினியா	லிச்சென்ஸ்ரெயின்	சவுதி அரேபியா
அல்ஜிரியா	எரித்திரியா	லித்துவேனியா	செனீகல்
அன்டோரா	எத்தியோப்பியா	மெசிடோனியா	சேர்பியா அன்ட் மொன்டி நீக்ரோ
அங்கோலா	பொக்லாந்து தீவுகள்	மடகஸ்கார்	சீசெல்லீஸ்
அங்கிலா	பாரோ தீவுகள்	மாலை தீவுகள்	சீராலியோன்
அந்தாட்டிக்கா	பிஜி	மாலி	சிலவாக்கியா
அன்டிகுவா அன்ட் பார்புடா	பிரெஞ் கயானா	மோல்டா	சிலோவினியா
ஆர்மேனியா	பிரெஞ் பொலினிசியா (தாஹிட்டி)	மாவுல தீவுகள்	சொலமன தீவுகள
ஆறுபா	காபோன	மொரித்தானியா	சோமாலியா
அசெர்பைஜன்	காம்பியா	மக்ரோனிசியா	சென்ற ஹெலனா
பஹ்ரைன்	ஜோர்ஜியா	மொல்டோவா	சென்ற் ஹிட்ஸ் அன்ட் நெவிஸ்
பார்படோஸ்	கானா	மொனாகோ	சென்ற் லூசியா
பெலாறஸ்	ஜிப்ரால்டர்	மொரோக்கோ	சென்ற் வின்செந் & கிரெனடினெஸ்
பெலிசி	கிறீன்லாந்து	மொசாம்பிக்	சூடான்
பூட்டான்	கிறேனாட	மியன்மார்	சுறினாம்
பொலிவியா	குவாடிலொப்பி	நமிபியா	சுவாசிலாந்து
பொஸ்னியா ஹேர்சிகோவினா	கௌத்தமாலா	நௌரு	சுவிற்சர்லாந்து
பொஸ்வானா	கைனியா பிஸ்ஸாயூ	நேபாளம்	சிரியா
பிரிட்டிஸ் வேர்ஜின் தீவுகள்	கயானா	நெதர்லாந்து அன்ரைலஸ்	தாஜிகிஸ்தான்
புர்கினா பாஸோ	ஹைற்றி	நியூ கலிடோனியா	தன்சானியா/சான்சிபார்
கம்போடியா	கொண்டுராஸ்	நிக்கரக்குவா	ருகோ
கமரூன்	இந்தியா	நைகர்	நினிடாட் & டுபேகோ
கேப் வேர்டி	ஈரான்	நைதீரியா	ரியூனிசியா
கேமான் தீவுகள்	ஈராக்	நையூ தீவுகள்	துக்மெனிஸ்தான
மத்திய ஆபிரிக்கன் குடியரசு	இத்தாலி	ஓமான	ஸ்ரூகஸ் அன்ட் கைக்கோஸ் இஸ்
சாட்	ஐவரிகோஸ்ட்	பாகிஸ்தான்	துவாலு
கொமோரோஸ் / மயோட்டி	ஜமேய்க்கா	பாலாயூ	யூஎஸ்
குக் தீவுகள	ஜோர்டான	பனாமா	உகண்டா
கியூபா	கசகிஸ்தான்	பப்புவா நியூகினி	உருகுவே
கொங்கோ குடியரசு	கெனயா	பரக்குவே	வனுவட்டு
திபாகோ கார்சியா	கிரிப்டி	பேரு	வியட்நாம்
டிஜிபோட்டி	வடகொரியா	பிலிப்பைனஸ்	வல்லிஸ் அன்ட் போட்டுனா
டொமினிக்கன் குடியரசு	வதவியா	கட்டார்	வெனரேன் சாமோ
கிழக்கு திமோர்	லெபனான்	றீயூனியன்	யேமன அரபுக் குடியரசு
ஈக்குவடோர்	லிசோதோ	ரோமேனியா	ஸம்பியா
எகிப்து	லைபீரியா	ருவாண்டா	ஸிம்பாவே

Sri Lanka Telecom

SLT MAXtalk பிறீபெயிட் காட் - இப்பொழுது எந்தவொரு நாட்டுக்கும் குறைவான கட்டணத்தில் சர்வதேச அழைப்புகள்.

- செக்கன் அடிப்படையில் கட்டணம்
- மறைமுக கட்டணம் இல்லை
- ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் அதியுயர் தொழிநுட்பமும், நம்பிக்கையும் கொண்டது.

தொடர்பிலக்கம் - 011 2555555

SLT MAXtalk
சர்வதேச அழைப்பு அட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு கிராம் இஞ்சி 200 ரூபாவாக விற்பனை

அரியாலை,ஒக்.20

யாழ். நகர மரக்கறிச் சந்தையில் நூறு கிராம் இஞ்சிக்கிழங்கு இருநூறு ரூபா விலையில் விற்கப்படுகின்றது. தென்பகுதியில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேரும் பயணிகள் சிலர் இந்த இஞ்சிக் கிழங்கை எடுத்து வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-17)

அடிப்படைச் சிங்கள மொழிப்பரீட்சை

கைதடி,ஒக்.20

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கடந்த வருடம் அரச அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட அடிப்படை சிங்கள மொழிப்பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் திருமதி வி.சிவலிங்கம் அவர்கள் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் கடந்த வருடமும் அடிப்படை சிங்கள மொழிப்பரீட்சையில் தோற்றி சித்தி அடையாதவர்களும் தோற்றலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (202-75)

நியமனம்

கைதடி,ஒக்.20

கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகராக ந.ராஜலிங்கம், மகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் பருத்தித்துறை, கோப்பாய், ஆகிய பிரதேச செயலகங்களில் சமூகசேவை உத்தியோகத்தராகவும் யாழ்.மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தராகவும் கடமையாற்றி வந்துள்ளார்.

தற்போது கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் இவர் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தராகவும் பதில் கடமை புரியவுள்ளார். (202-75)

குடாநாட்டில் 500 தொலைபேசிகள் செயலிழந்தன; திருத்தவேலைகள் மந்தகதியில்

யாழ்ப்பாணம்,ஒக்.20

குடாநாட்டில் ஐந்நூறு தொலைபேசிகள் செயலிழந்துள்ளன என ரெலிக்கொம் நிறுவன பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாகப் பரவலாக இடம் பெற்றுவந்த குண்டு வெடிப்புகள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஆகியன காரணமாக கேபிள்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தன என்றும் -

தற்சமயம் மழைகாலம் ஆரம்பித்துள்ளதால், கேபிள்களுக்குள் நீர் செல்வதால் இணைப்புகள் பழுதடைந்துள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த இணைப்புகளைத் திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் -

ஊரடங்கு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவைகள் காரணமாக ஊழியர்களின் வேலை நேரம் குறைந்துள்ளது. அதன் விளைவாகத் திருத்த வேலைகளை விரைவாக மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார். (1)

வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்க மரக்கறி விதைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

'சொண்ட்' நிறுவனம், கிராம அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ், கிராம மட்ட அமைப்புகள் ஊடாக வீட்டுத்தோட்ட விதையினங்களை வழங்கிவருகிறது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சி, கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கிராம அமைப்புகளூடாக விதையினங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வெண்டி, கீரை, தக்காளி, மிளகாய், பூசணி, அவரை போன்ற விதையினங்கள் வழங்கப்படுவதுடன், தேசி, தோடை, கொய்யா போன்றபயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்று மேற்படி நிறுவனம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

இடம்பெயர்ந்த மக்களுக்கு சோஆ நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம்,ஒக்.20

அகதிகளுக்கான பராமரிப்பு நிறுவனம் (சோஆ) கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உணவு மற்றும் அத்தியவசியப் பொருள்களை வழங்கியுள்ளது.

யாழ். அடைக்கல மாதா ஆலயம், கதீனா முஸ்லிம் கல்லூரி, நாவந்துறை பாடசாலை, சந்தன மாதா ஆலயம் ஆகிய முகாம்களில் தங்கியிருந்த 380 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டன.

பானை, வாளி, நுளம்புவலை, சவர்க்காரம், அரிக்கன் லாம்பு, தாச்சி, கத்தி, பாய், சுடுதண்ணீர்ப்போத்தல் என்பன வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியுள்ள வெளிமாவட்ட நோயாளர்களுக்கு உணவும் உணவல்லாத பொருள்களும் வழங்கப்பட்டன என்றும் -

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள முகாம்களில் வாழும் 256 குடும்பங்களுக்கும் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதாகவும் - நிறுவனம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

வடமராட்சியில் முட்டை விலையேற்றம்

பருத்தித்துறை,ஒக்.20

வடமராட்சியில் முட்டையின் விலை உயர்ந்துள்ளதுடன் தட்டுப்பாடாகவும் உள்ளது. கால்நடைத்தீவனத்திற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடால் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை இறைச்சிக்காக விற்பனை செய்துவருகின்றனர். முட்டைக் கோழிகளும் இறைச்சிக்காக விற்கப்படுவதால் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. (202-118)

வீதித் திருத்த வேலைகளை முன்னெடுக்க முடியாதநிலை

மூலப்பொருள்கள் இல்லாமையே காரணமாம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

குடாநாட்டில் வீதித் திருத்த வேலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள் இல்லாமையால் வேலைத்திட்டங்களில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வீதித்திருத்த வேலைகள் தொடர்பாக கேட்டபோது அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் தார், மணல் போன்ற மூலப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் வீதிகளைப் பாராமரித்தல் அவற்றில் ஏற்பட்டுள்ள குண்டு குழிகளைச் சீராக்கல், புதிய வீதிகளை அமைத்தல், இறங்குதுறைகளை விஸ்தரித்தல் போன்ற வேலைத்திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாத நிலை உள்ளது - என்றார். (1-202-88)

உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காதோருக்கு கல்விப் புலமைப்பரிசில் திட்டம்

சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களில் உயர்கல்வி வாய்ப்பற்றிருக்கும் பிள்ளைகளின் நலன்கருதி, சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் 'சமுர்த்தி சிப்தொர' என்னும் கல்விப் புலமைப்பரிசில் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க பிரிவுக்குட்பட்ட கடந்த ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் தோற்றி உயர்தரத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களைப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

விண்ணப்ப படிவத்தை தங்கள் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெற்று பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பிரதேச செயலக சமுர்திப் பிரிவில் உடன் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202)

நாளை

ஐப்பசி 04
சனிக்கிழமை
21.10.2006
திதி : சதுர்த்தசி
முற்பகல்: 08.53
நட்சத்திரம் : அத்தம்
பிற்பகல் : 12.54
தீபாவளி
சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02- 10.32

அதிபர், பிரதி அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

திருகோணமலை,ஒக்.20

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் அதிபர் மற்றும் பிரதி அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவு கோரியுள்ளது.

இவ்வெற்றிடங்களுக்கு இலங்கை நிர்வாக சேவை தரம் III உத்தியயோகத்தர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். ஏற்கனவே தரம் II உத்தியோகத்தர்களே விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும், நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் 9ஆம் திகதி நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவு கல்விப்பணிப்பாளர் கே.முகமட்தம்பி தெரிவித்தார். (202)

வர்த்தக, விஞ்ஞான போட்டிப் பரிசளிப்பு

கல்வியங்காடு,ஒக்.20

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட வர்த்தக விஞ்ஞானப் போட்டிகளில் வெற்றிபெற்றமாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரிய ஆலோசகர் வ.துரைராசசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கௌரவிருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (79)

பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.20

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முதன்மைப் பெறுபேறுபெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் கா.குமாரவேலு தலைமையில் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பாராட்டு விழாவில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நீர்வேலி பூதர்மடக் கிளையை மீள இயக்குமாறு மக்கள் கோரிக்கை

அரியாலை,ஒக்.20

நீர்வேலி தெற்கு, பூதர்மடம் பகுதி மக்களின் நன்மைகருதி அப்பகுதியில் சங்கக் கிளை ஒன்றை ஆரம்பித்துவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீர்வேலி பலநோக்குக் கூட்டுவுறச் சங்கத்தின் கிளை ஒன்று ஏற்கனவே 1995ஆம் ஆண்டுக்கு முன்னர் அப்பகுதியில் இயங்கி வந்தது.

இந்தக் கிளை தற்போது கந்தசுவாமி கோயிலடிப் பகுதியில் பிறிதொரு சங்கக் கிளையுடன் சேர்ந்து இயங்கிவருவதால், பொருள்கள் விநியோகத்தில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் தமக்குரிய பொருள்களைப் பெறுவதற்குத்தினமும் சங்கக் கிளைகளுக்குச் சென்று ஏமாற்றம் அடைகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-17)

யாழ். பல்கலைக்கழகத்தில் கனகரத்தினா நினைவுக் கூட்டம்

நல்லூர்,ஒக்.20

கல்வியாளரும் ஊடகவியலாளரும் இலக்கியவாதியுமான ஏ.ஜே.கனகரத்தினா நினைவாக அஞ்சலிக் கூட்டம் நேற்றுமுன் தினம் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் இடம்பெற்றது.

ஏ.ஜேயின் யாழ். பல்கலைக்கழக நண்பர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு கலைப்பீடாபதி பேராசிரியர் எஸ். சிவச்சந்திரன் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் பதில்துணைவேந்தர் பேராசிரியர் கே.குமாரவடிவேல் ஏ.ஜேயின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

அஞ்சலி உரைகளை திருமதி சாந்தி விக்னராஜா, பதில் துணைவேந்தர் ஆகியோர் நிகழ்த்தினார். (1-202-111)



இலக்கியவாதி ஏ.ஜே. கனகரத்னா நினைவுக் கூட்டத்தில் ஏ.ஜேயின் உருவப்படத்திற்கு யாழ். பல்கலைக்கழக பதில்துணைவேந்தர் பேராசிரியர் கே. குமாரவடிவேல் மலர் மாலை அணிவிப்பதையும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிவச்சந்திரன் தலைமை உரை நிகழ்த்துவதையும் விரிவுரையாளர் சாந்தி விக்னராஜா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பணியாளர்களின் புதைக்கப்பட்ட உடல்கள் மீளவும் தோண்டி எடுத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. இதற்கான பணிகள் புதனன்று ஆரம்பித்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நீதிமன்ற நீதிவான்கள் இரண்டுபேர், ஆறு மாவட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் ஆஸ்திரேலிய விசேட நிபுணர்கள் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர்.

பிலியந்தலவில் இரு சடலங்கள் மீட்பு

பிலியந்தல குடாமடுவ மத்தேகொட வீதியில் அடையாளம் தெரியாத இரு சடலங்களை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டன என்று கல்கிசை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் வி.அபேநாயக்க தெரிவித்துள்ளார்.

இளைஞர் ஒருவரும் யுவதி ஒருவருமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொண்டு, கொலைசெய்யப்பட்ட பின்னர் சடலங்களைக் குறிப்பிட்ட இடத்தில் போட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைகளுக்கு 9மில்லிமீற்றர் ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் சடலங்கள் காணப்பட்டதாகவும் பொலீஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (203)

வீதிகள் எங்கும் படையினரின் உடல்கள்; சமநானப் பேச்சு இப்போது ஏன்?

ஹெல உறுமய தேரர் ஆவேசம்

கொழும்பு, ஒக்.20

தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் காரணமாக படையினரின் உடல்கள் வீதிகளில் வெடித்துச் சிதறும் இச்சந்தர்ப்பத்தில், அரசுபுலிகளுடன் பேச்சு நடத்த முனைவது சரிதானா? பேச்சை நிறுத்திப் படையினரைப் பலப்படுத்திப் புலிகளை இல்லாதொழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் எம்.பி. வண.அத்துரலிய ரத்ன தேரர் கடந்த புதனன்று நாடாளுமன்றில் விஷேட கூற்று ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசிற்கும் புலிகளுக்குமிடையில் அமைதிப் பேச்சை நடத்த இணக்கம் காணப்பட்டபோதிலும் புலிகளுக்குப் பேச்சின் மீது விருப்பமில்லை என்பதை புலிகள் படையினர்மீது மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான, மிலேச்சத்தனமான தாக்குதல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இருந்தும் பேச்சை முன்னெடுக்கவே அரசு முயற்சிக்கிறது. படையினர் புலிகள் மீது தாக்குதலை மேற்கொண்டு புலிகளைப் பலவீனப்படுத்தி தொடர்ச்சியான வெற்றியைப் பெற்றுவந்தனர்.

இடையில் ஒருசில இடங்களில் சறுக்கல் ஏற்பட்டது. இதைக் காரணங்காட்டி படையினரின் மனவலிமையைக் குன்றச்செய்து - படை நடவடிக்கையால் புலிகளை முடக்க முடியாது என நினைத்து பேச்சுக்குச்செல்ல அரசு முயற்சிப்பது தவறு.

அரசு இவ்வாறு செய்யும் அதேநேரம், புலிகள் படையினர் மீதான தாக்குதலை நடத்திய வண்ணமேதான் உள்ளனர். வீதிகளில் படையினரின் உடல்கள் வெடித்துச் சிதறுகின்றன.

இந்த மாதிரியான ஒரு சூழ்நிலையில் பேச்சுக்குச் செல்ல அரசு முனைவது சரிதானா? அதைவிட்டுவிட்டு படையினரின் மனவலிமையை அதிகரித்து அவர்களின் மூலம் புலிகளை ஒடுக்க அரசு முன்வரவேண்டும் - என்றார். (07)

வடக்கு-கிழக்கை இணைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு

கொழும்,ஒக்.20

"வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், அம் மாகாணங்கள் பிரிக்கப்படாமல் தொடர்ந்தும் இணைந்திருப்பதற்காக அரசு நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெற முயற்சித்தால் அம் முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதரவை வழங்கும்."

- இவ்வாறு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல கடந்த செவ்வாயன்று கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சமயம் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:-

இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுக்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு அமைவாகவே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்றும்- இலங்கை நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறாமல் இடம்பெற்ற இவ்விணைப்பானது சட்டவிரோதமானது என்றும் - அத்தீர்ப்பு அமைந்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புக்கு புறம்பாகவடக்கு-கிழக்கு இணைந்துதான் இருக்கவேண்டும் என்றால் அது அரசிடம்தான் தங்கியுள்ளது. அவ்வாறு இணைந்திருப்பதற்கான அங்கீகாரத்தை அரசு நாடாளுமன்றத்தின் ஊடாகப் பெற முயன்றால் நாம் அதற்கு முழு ஆதரவையும் வழங்குவோம்.

இதுதொடர்பாக நாடாளுமன்றில் சட்டமூலத்தை சமர்ப்பிக்க அரசு கொண்டுவந்தால் அதனைப் பரிசீலித்து சாதகமான பதிலை வழங்குவோம் - என்றார். (த)

ஹப்புத்தளையில் மண் சரிவு; கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன

கொழும்பு, ஒக்.20

பண்டாரவளையில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழைகாரணமாக இடம்பெற்ற மண்சரிவால் ஹப்புத்தளையில் உள்ள வர்த்தக நிலையங்கள் பல இடிந்து வீழ்ந்துள்ளன என்று பண்டாரவளைப் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இந்த அனர்த்ததின் போது ஏழு வர்த்தக நிலையங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

ஏனைய வர்த்தக நிலையங்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற காரணத்தினால் அவற்றில் உள்ள உணவுப் பொருள்களை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லுமாறு பொலீஸார் உத்தரவிட்டுள்ளனர்.

இடிபாடுகளில் மின்சார வயர்கள் சிக்கியுள்ளதால் அவற்றிலிருந்து பொருள்களை மீட்டெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-203)

மாணவர்களுக்கு மதிய உணவுத்திட்டம்: அடுத்த வருடம் கூடுதல் நிதிஒதுக்கீடு

கல்வி அமைச்சர் தகவல்

பாடசாலை மாணவர்களுக்குப் பகல் உணவு வழங்கும் வேலைத்திட்டத்துக்கு இந்த வருடத்தை விட அடுத்த வருடத்தில் கூடுதலான தொகையை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கியுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த கூறியுள்ளார்.

அடுத்த வருடம் இத்திட்டத்திற்கென 77 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள 17 ஆயிரத்து 770 பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவுகளைச் சேர்ந்த 6 லட்சத்து50ஆயிரம் மாணவர்கள் இதன் மூலம் நன்மையடைவர்.

அச்சுறுத்தலுக்கு உட்பட்ட பிரதேசத்தை சேர்ந்த பாடசாலைகளிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

எதிர்வரும் 3 வருடங்களில் இத்திட்டத்தை அனைத்துப் பாடசாலைகளிலும் அமுல் படுத்தப்படவுள்ளோம்- என்று அமைச்சர் தெரிவித்தார். (203)

இந்தியா செல்லமுயன்ற 9 பேர் மன்னாரில் கைது

கொழும்பு, ஒக். 20

சட்டவிரோதமாகப் படகுகள் மூலம் இந்தியாவிற்குச் செல்ல முயன்ற ஒன்பது பேர் தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமன்னார் கடற்பரப்பின் ஊடாக இவர்கள் இந்தியாவுக்குச் செல்ல முயன்றுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை கடற்படையினர் காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்கள் மன்னார்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.(1-203)

யாழ்.வலயத்தின் தமிழ்த்தினப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்.கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையேயான தமிழ்த்திறன் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆசிய இடங்களில் நடைபெறவுள்ளது.

போட்டி விவரம் குறித்து பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கோட்ட மட்டப்போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களை போட்டிக்குத் தயார் செய்யுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

அந்தோனிப்பிள்ளை மரியம்மா (செல்லம்மா)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியம்மா 18.10.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - ஆரோக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் திருமதி யோசவ் திரசேம்மா, திருமதி சேவியர் மேரியோசேப்பின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான யோன்பிள்ளை (உபதேசியார்), அருட்சகோதரன் மரியாம்பிள்ளை (S.J.), அருட்சகோதரி லூசி(H.F), அமிர்தநாதர் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற இராசநாயகம் ஆன்மேரி, திருமதி யோன்பிள்ளை மேரி லூர்து, திருமதி லூயிஸ் அன்ரன் கார்மேல் ஆகியோரின் அன்புத் தாயும் மெல்சோன் சந்திரகுமார், அன்ரன் ராஜ்குமார், யோன் உதயகுமார், பிரான்ஸிஸ் ஜெகநாதன், பென்யமீன் யோகநாதன், அருட்தந்தை பஸ்ரியன் ஜோதிநாதன்(அச்சுவேலிப் பங்கு), யோசவ் ஜொலிநாதன், காலஞ்சென்ற இமாக்குளேற்றா யோகேஸ்வரி, யூட்நாதன், கிறிஸ்டா ஜஸ்மி,கிறிஸ்டியானா டஸ்மி, யூக்கிறேஸ்டா கஸ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று(20.10.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
அருட் தந்தை
பஸ்ரியன் ஜோதிநாதன் (பேரன்)

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (54518)

மரண அறிவித்தல்கள்

நாகலிங்கம் சிவபாக்கியம்

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவபாக்கியம் நேற்று(19.10.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் நாகலிங்கத்தின் மனைவியும் குமாரதேவி, வனிதாதேவி(Canada), தயா(Canada) ஆகியோரின் அன்புத் தாயும் கனகசிங்கம், காலஞ்சென்ற விவேகானந்தம் மற்றும் சிவபாலு(Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும் முரளி(கண்ணன் - ஹரன் ரெக்ஸ்ரைல், சித்திராதேவி, முகுந்தன்(Canada), நிஷாந்தி, ஜெயந்தன் (Canada), ராதிகா, நர்மதா, மெய்யழகன்(U.S.A.), சுகந்தன்(Canada), கவி(Canada), அனங்கன்(Canada) ஆகியோரின் அன்புப் பாட்டியும், ஹனியன் (U.S.A.), துவாரகா, தேனுஷன்(U.S.A.), அகரன் (Canada), சஞ்சீவி (Canada) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.10.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39, ஆடியபாதம் வீதி,
M.P.C.S. ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
தொலைபேசி : 4590188

தகவல்:
ந.கனகசிங்கம்(மருமகன்),
க.குமாரதேவி(மகள்),
க.முரளி(கண்ணன் - பேரன்)

கந்தப்பு அருளானந்தம்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு அருளானந்தம் அவர்கள் நேற்று(19.10.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிலோன்மணியின் அன்புக் கணவரும் அபிலா, அபர்ணா ஆகியோரின் தந்தையும் கந்தப்பு - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தனக்கிரியைக்காக மழுவை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பறாளாய் றோட்,
சுழிபுரம்.

தகவல்:
க.தவபாலரட்ணம்
(தவம்)

(54523)

இதய அஞ்சலி

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான பரம்பரை ஆதீன கர்த்தவாக இருந்து 12.10.2006 வியாழக் கிழமை அன்று கந்தவன நாதன் மலர்ப்பாதம் சென்று மருவிய

அமரர்

செல்வி செல்லையாபிள்ளை பாற்பதியம்மை

அவர்களின் ஆத்மா சாந்தியடைய கந்தவன ஷண்முகப் பெருமானைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ச.வைத்தியநாதக்குருக்கள்
குடும்பத்தினர்,
பிரதமகுரு கந்தவனம் தேவஸ்தானம்,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை

(54512)

45ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
17
61
1982

விண்ணில்
06
09
2006

அமரர்

சற்குணராசா நுசந்தன்

நாள்கள் பல ஓடினாலும்
உன் நீண்ட துயில் நீங்கிடுமா
எம் வேதனை தான் தீர்ந்திடுமா?
யாவருக்கும் உதவும் சேவகனாய்
ஆலமரமாய் பரந்து வளர்ந்தாய்
பகை பாராட்டா நற்பண்பாளனாய்
கவர்ந்தாய் பல இதயங்களை.

அம்மன் வீதி,
தலங்காவல் பிள்ளையார் கோயிலடி,
திருநெல்வேலி.

உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

(54499)

யாழ் மாவட்ட மாணவர்களுக்கு
சர்வதேச ரீதியிலான
வங்கியியல் கற்கைநெறிகள்

B.Sc.(Hons) Degree &ACIB
DBF, ACBF, CBF (CIB/IBSL)

University Of Manchester (UMIST)
Chartered Institute Of Bankers, London (CIB)
Institute Of Bankers Of Sri Lanka (IBSL)

Five (5) Internationally recognized professional Qualifications over 3 years **Wish To Register?**

Register With the IBSL through Jaffna College

Do you Have G.C.E.(A/L) 2 passes and G.C.E.(O/L) 6 PASSES WITH 5 credits including Maths /Commerce & Accounts And Language (Tamil / English)

B.Sc (Hons) (UMIST)with ACIB (London) (6 Months)

CBF Certificate banking & Finance (6 months)

ACBF Advanced certificate in banking & finance (6 Months)

DBF Diploma In Banking & Finance (6 Months)

Exams Held Twice a year March & September

திகதி 30-10-2006 முன் பதிவுகொள்ளவும்

INQUIRIES/ REGISTRATION DIRECTOR
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT
464, Hospital Road, Jaffna.

மரண அறிவித்தல்

திருமதி வாசுதேவலிங்கம் கமலாதேவி

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாசுதேவலிங்கம் கமலாதேவி 18.10.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் வாசுதேவலிங்கத்தின் அன்பு மனைவியும் அமரர் செந்தில்ராசன், அன்பரசி, முத்தழகன்(ஜேர்மனி), எழிலரசி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும் சோமாஸ்கந்தராசா (கேமா ஸ்ரோர்ஸ்), ரஞ்சினி(ஜேர்மனி), ஞானசேகரம் (நோர்வே) ஆகியோரின் மாமியும் பாலசுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம், கனகம்மா, புஷ்பலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் அமிர்தலிங்கம் (முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்), அமரர் சொக்கலிங்கம் (சட்டத்தரணி), திகம்பரலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் கேமலதா - சிவபாலன்(வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை), மிர்தா, ரேகா, அமிர்தன், அபிரன், அச்சுதன்,வாகினி, அருண் ஆகியோரின் பேர்த்தியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்அவரது இல்லத்தில் 19.10.2006 நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேமா ஸ்ரோர்ஸ்,
பண்ணாகம்,சுழிபுரம் (54514)

தகவல்:
வாசுதேவலிங்கம் (கணவர்),
பிள்ளைகள்.

கூ. சங்கங்களில் பங்கீட்டுக்கு நானாவிதப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஒக.20

மூடாநாட்டில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் பங்கீட்டுக்கு நானாவிதப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

பால்மா, தீப்பெட்டி, வெள்ளைப்பூடு, சன்லைற், ரின்மீன், சமையல் எண்ணெய் போன்ற பல்வேறு பொருள்கள் குறிப்பிட்ட அளவில் வழங்கப்படுகின்றன. (203-118)

தவறிவிட்டது

நந்தாவில், தாவடி, தெற்கைச் சேர்ந்த முத்துச்சாமி சிவலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (600401890V), விசேட அடையாள அட்டை என்பன 14.10.2006 அன்று யாழ்.பெருமாள் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.பெருமாள் கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்து உதவவும்.

MATHS CENTRE
NELLIADY
A/L DAY
(கலை வகுப்பு)

ஆரம்பம் : 20.10.2006
ö , 7 a.m.

எமது வழமையான ஆசிரியர் குழுவுடன்

இந்து நாகரிகம்
திரு.ஜோதீஸ்வரன்

பாடம் மாறியோருக்கான பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன.

ஆஸ்திரேலியா, கனடா விசா - விற்கான விண்ணப்பப்படிவம்

பின்வரும் இடங்களில் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம். கையிருப்பு குறைவாகவே உள்ளன. உடன் முந்துங்கள்.

- பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம் அருகில், யாழ்ப்பாணம்.
- BEST ONE கொமினிகேஷன், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டைச் சந்தி.
- DTS கொமினிகேஷன், K.K.S வீதி, தட்டாதெரு சந்திக்கு அருகில்
- கணேசன் கொமினிகேஷன், கொக்குவில் சந்தி.
- தயாளினி வீடியோ சென்டர், பிடாரி அம்மன் கோயிலடி, ஆனைக்கோட்டை.
- அர்ச்சயன் கொமினிகேஷன், பொன்னையா லேன், ஆறுகால்மடம்.
- பிறிவேர்சல் பான்சி, பரமேஸ்வரா சந்தி, பல்லி றோட்.
- சிறி சரவணாஸ் களஞ்சியம், 610, பருத்தித்துறை வீதி, (நல்லூர் கோயில் முன்பாக)

சேவையை நலன் பாராட்டு

எமது பாடசாலையில் பதினைந்து ஆண்டுகளாகப் பணிபுரிந்து ஓய்வுபெறும் எங்கள் சக ஆசிரியர்

திரு.ஜோ.ஐ.ஜெயரட்ணம்
(S.L.T.S.-I)

விஞ்ஞானக் கல்வியுடன்
விளங்கும் உடல் -உள - சமூக
நல் ஆத்ம சிந்தையுமாய்
நாளும் உயர் பணிபுரிந்த
நன்நாளை எண்ணி - என்றும்
நலன் உயர வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
(54510) யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

45 ஆம் நாள் கண்ணீரால் காணிக்கை

அமரர்

சற்குணராசா நுசந்தன்

மண்ணகத்தில் நாமிருக்கும் காலம் வரை
உங்கள் நினைவுகளும் கூடவரும் எம்முடனே.

நல்லூர். (54480) உங்கள் உறவுகள்.

6ஆம் ஆண்டின் நினைவில்

வாழ்வுக்காக
08
01
1960

ஓய்வுக்காக
25
10
2000

அமரர் **கந்தப்பு தவராசா (பவா)**

திதி: 20-10-2006

உந்தன் நினைவுகளால் எந்த நாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம் - நாம் ஆற
வந்து ஒருதரம் பார்க்காயோ அப்பா?
சந்தை சந்தடிகள் கூறும் உங்கள் நாமம்
எந்தநாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தேவிடுங்கள் எம்மிடம்!

கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (54434)

நினைவுத்துயரில்:
மனைவி, பிள்ளைகள்.

ADMISSIONS OPEN

A/L பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துவிட்டதா?
அடுத்து என்ன?

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான வாய்ப்பு
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் கௌரவமான வேலைவாய்ப்பு
- சொந்த மண்ணில் பெற்றோரின் அரவணைப்பில் உயர் கல்வி

பெற்றோர்களே !!

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த ஓர் எதிர்காலத்திற்கான முதலீடு HND

பதிவுகளுக்கு நீங்கள் முந்திக்கொள்ளுங்கள்

BTEC HND
World Class Qualifications
Delivered Locally..... Recognised Globally

B.Sc (Hons) / BEng (Hons)
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc,

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology (1½years)

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
TP No. : 021 222 8060 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

பட்டறிந்தும் தெளியாத போக்கு

நேற்றுமுன்தினம் காலையில் காலித் துறைமுகத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்து காலி நகரத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்செயல்கள் வெடித்திருக்கின்றன. நகரத்தில் தமிழ்ப் பேசும் மக்களுக்குச் சொந்தமான கடைகள், உடைமைகளைக் குண்டர்கள் தாக்கிச் சேதப்படுத்தியிருக்கின்றனர். வாகனங்கள் சிலவும் சேதமாகப்பட்டிருக்கின்றன.

தடிகள், பொல்லுகள், இரும்புச் சட்டங்களுடன் வந்த கும்பல் ஒன்றே இந்த அடாவடித் தனங்களைப் புரிந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புத் தரப்பினர் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, கலவரம் பரவாமல் பார்த்துக்கொண்டனர். இல்லையேல் நிலைவரம் விபரீதமாகியிருக்கும்.

எங்கோ, யாரோ நடத்திய தாக்குதலுக்காக யுத்தத்தில் சம்பந்தப்படாத அப்பாவித் தமிழ் மக்களை இனக் குரோதத்துடன் நோக்கி தனது கொடூரக் கைவரிசையைக் காட்டுவதற்கு தென்னிலங்கைச் சிங்களம் எடுத்திருக்கும் இந்தச் செயலைப் பார்க்கும்போது இவ்வளவு பட்டறிவின் பின்னரும் தென்னிலங்கை திருந்தவில்லை, திருந்தப் போவதில்லை என்பது தெளிவாகப் புரிகின்றது.

நலிவுற்று - அமுங்கி - இருந்த ஈழத் தமிழர்களின் ஆயுத வழி விடுதலைப் போராட்டத்தை வீறு கொண்டு எழ வைத்ததே இத்தகைய இனக்கலவரங்கள்தாம் என்பதை தென்னிலங்கை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து போய்ச் செயற்படுவது வியப்புத் தருகின்றது.

உணர்ச்சியின் வேகத்தில் பேரினவாத வெறி கொப்பளித்து வெளிப்பட்டதன் பெறுபேறே 1983 ஆடிக் கலவரம். அது ஆடி அடங்கியபோது தமிழின விடுதலைப் போராட்டம் உயிர்ப்பித்து உசுப்பிவிடப்பட்டது.

திருநெல்வேலியில் பதின்மூன்று சிங்களச் சிப்பாய்களின் உயிர்களைச் சாய்த்த தாக்குதல் சம்பவத்துக்குப் பழிவாங்குவதற்காக தென்னிலங்கை எங்கும் பேரினவாதப் புயல், வன்முறைச் சூறாவளியாக வீசி அடங்கியது. அந்தக் கலவரம் தமிழ்த் தேசிய ஆன்மாவில் விழுந்த மாபெரும் துன்பியல் வடு. மாறாத காயம். ஆழப் புரையோடிய ரணம்.

தமிழ், சிங்கள இனங்களிடையே பின்னாளில் என்றும் சீர் செய்ய முடியாத அளவுக்கு இரு தரப்புக்கும் மத்தியிலான உறவை இக்கலவரம் நிரந்தரமாகவே கருவறுத்து விட்டது.

அது மாத்திரமல்ல. மோதல்களோடு சம்பந்தப்படாத அப்பாவித் தமிழர்களைப் பழிதீர்க்கும் பேரினவாதத்தின் இந்தக் கொடூரமே, தமிழ்த் தேசிய உணர்வை கண்டங்கள் கடந்து - நாடுகள் தாண்டி - எல்லைகள் மீறி - பிரவாகம் எடுக்கச் செய்து, தமிழ்த் தேசியச் சக்திகளை ஒரு முனை நோக்கிப் போராட வழிசமைத்துக் கொடுத்தது.

இனக்கலவரம் என்ற தமது மிக மோசமான வன்முறைப் போக்கின் மூலம் தமிழர் தரப்பில் விடுதலைக்கான வீறையும், மறுமலர்ச்சியையும் தோற்றுவித்து, தனியரசுப் போராட்டத்துக்கான அக - புறச் சூழ்நிலையை எண்பதுகளின் ஆரம்பத்தில் ஏற்படுத்திக் கொடுத்தவை இதே பேரினவாத சக்திகளே.

இன்றும் வரலாற்றின் முக்கியமான ஒரு கால கட்டத்தில் அதே கைவரிசையைக் காட்டுவதன் மூலம் தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்கு மற்றொரு உந்துதலை - ஊக்கத்தை - கொடுக்கத் தம்மையறியாமலேயே தயாராகின்றன அச்சக்திகள்.

யுத்தம் அரங்கேறும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில், தமிழர் தாயகத்தில், தென்னிலங்கை அரசின் சிங்களப் படைகள் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகளைப் புரிந்த வருகின்றன என்ற குற்றச்சாட்டுக் குறித்து சர்வதேச மனித உரிமை அமைப்பு கள் பல குரல் எழுப்பி வருகின்றன. சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கும், சிரத்தைக்கும் உரிய விடயமாக அது மாறி வருகின்றது.

அந்தப் பின்னணியில், தமிழர் தாயகத்துக்கு வெளியில் வசிக்கும் தமிழ்ப் பேசும் அப்பாவி மக்களும், தென்னிலங்கைச் சிங்களக் குண்டர்களின் இனப்பழிவாங்கல் கைவரிசைக்கு இலக்காவார்கள் என்றால் - திட்டமிடப்பட்ட வகையில் இன அழிப்புக் கலவரம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுமானால் - இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு என்ற விடயத்தில் பல்வேறு மாற்றங்களை அது உருவாக்கி விடும்.

1983 ஜூலையில் - ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான இரும்புப் பிடி ஆட்சியில் - தமிழர்களுக்கு எதிராக வீசிய இனக்கலவரம் என்ற வன்முறைப் புயல், தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றுப் பாதையை மாற்றி அமைத்து, ஒரு திருப்பு முனையாக விளங்கியது. அதுபோல, இனியும் தமிழர்கள் மீது ஒரு கோர - கொடூர - இனக்கலவரத்தைத் தென்னிலங்கை கட்ட விழ்த்துவிடுமானால், அதுவும் தமிழர்களது தற்போதைய விடுதலைப் போராட்டத்தில் மற்றொரு உத்வேக மாற்றத்தை ஏற்படுத்தி விடும் என்பது நிச்சயம்.

இந்த அர்த்தப் பரிமாணத்தைத் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டதால்தான், பேரினவாத சக்திகளின் தூண்களாகத் தாங்கள் விளங்கினாலும், இனக்கலவர முயற்சிக்கு முண்டு கொடுக்காமல் - 1983 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு இனக்கலவரம் கொழுந்து விட்டெரிய பார்த்துக்கொண்டு வாளா இருந்தது போல - இப்போது பார்த்துக்கொண்டிராமல் விரைந்து நடவடிக்கை எடுத்து, நிலைமையை ஒழுங்குக்குள் கொண்டு வருவதில் உறுதியாக நிற்கின்றது.

ஆனால், பேரினவாத உணர்ச்சியில் கிளர்ந்து நிற்கும் தென்னிலங்கை சக்திகளுக்கோ, அந்த உணர்ச்சியே அவர்களது மதியை மறைப்பதால், 1983 ஆடித் தவறை மீண்டும் கட்டவிழ்க்க அவை முனைப்புக் காட்டுகின்றன.

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு முகம்கொடுக்க முடியாமல் அரசுப் படைகள் தடுமாறும்போது, அந்தக் கையாலாகாத்தனம் தெற்கில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரமாக வெடிக்கும் ஆபத்து உண்டு. அப்படி நேர்ந்தால் தமிழர்கள் மீண்டும் பெரும் உயிர், உடைமை அழிவுகளுக்கு முகம் கொடுக்க நேரும்

ஆனால், அதன் விளைவு நிச்சயமாக அந்தக் கொடூரத்துக்கு - வினைக்கு - நினைத்துப் பார்க்கமுடியாத பெறுமதியான பரிசைத் தென்னிலங்கை தமிழினத்துக்கு கொடுப்பதாகவே முடியும்.

நானாவிதப் பொருள்களுடன் 'யால' கப்பல் காங்கேசனுக்கு!

நாளை தொடக்கம் பொருள் இறக்கும் பணிகள்

யாழ்ப்பாணம், ஒக.20

நானாவிதப் பொருள்கள் உட்பட இரண்டாயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்களுடன் 'யால' என்ற கப்பல் இன்று காங்கேசன்துறையை வந்தடையவுள்ளது.

இக்கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் நாளை பருத்தித்துறைத் துறைமுகத்தில் ஆரம்பமாகவிருக்கின்றன. இக்கப்பலில் அரிசி, சீனி மற்றும் செத்தல் மிளகாய், புளி, தீப்பெட்டி, பிஸ்கட், பால்மா, தேங்காய் எண்ணெய் ஆகிய நானாவிதப் பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன.

அதேவேளை - பருத்தித்துறையில் பொருள் இறக்கிக்கொண்டிருந்த 'ஹின்ட்' என்ற கப்பல் நேற்று பொருள்கள் இறக்கப்பட்டதை அடுத்து கொழும்பு திரும்பியது.

இதற்கிடையில் - யாழ்ப்பாணத்திற்குத் தேவையான உரத்தை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள என்றும் -

இன்று கொழும்புத் துறைமுகத்தில் உரப்பொதிகளை ஏற்றும் நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் -தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-203)

மக்கள் வங்கிக் கிளைகள் நாளை திறந்திருக்கும்

தீபாவளியை முன்னிட்டு நாளை சனிக்கிழமை யாழ்.மாவட்டத்திலுள்ள சகல மக்கள் வங்கிக் கிளைகளும் விசேட வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்காக திறந்திருக்கும் என்றும் - அன்றையதினம் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரையுள்ள நேரத்தில் புதிதாக கணக்குத் திறப்பவர்களுக்கும், ஏற்கனவே உள்ள கணக்குகளுக்கும் 5 லட்சம் ரூபா வைப்பிலிடுபவர்களுக்கும் அழகிய பித்தளைத் தட்டு அன்பளிப்பாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவில் இன்று பால் மா விநியோகம்

குருநகர், ஒக.20

மண்டைதீவு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு வயது தொடக்கம் 3 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை பணத்துக்கு பால்மா பைக்கட்டுகள் வழங்கப்படும் என்று வேலணை கிராமிய வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர்.ஆ.திருநாவுக்கரசு தெரிவித்தார். (51)

ஐந்தாம் கட்ட உணவு விநியோகம் அடுத்தவாரத்தில் ஆரம்பமாகும்

யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.20

குடாநாட்டில் ஐந்தாம் கட்ட உணவு விநியோகம் ஆரம்பமாகவிருக்கின்றது என அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

11.08.2006 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களுக்காக, ஓகஸ்ட் மாத நிவாரணம் மற்றும் சமுர்த்தி முத்திரைக்கான செப்ரெம்பர் மாத நிவாரணம் ஆகியனவும்-

ஏனையவர்களுக்கு பணத்துக்கும்- இந்த உணவு விநியோகம் இடம்பெறவுள்ளது என்றும்- அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்கு முன்னோடியாக யாழ்ப்பாணம், நல்லூர் ப.நோ.கூ.சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது என்றும் -

தற்போது இடம்பெறும் உணவு விநியோகம் தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்றும்- அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (1)

ஒரு வார காலத்துக்குத் தேவையான கோதுமை மா கிடைத்துள்ளது

பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் தகவல்

கல்வியங்காடு,ஒக.20

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கு ஒரு வார காலத்துக்குத் தேவையான கோதுமை மா வழங்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

ஒருவார காலத்துக்கு தேவையான 2ஆயிரத்து 300 மூடை கோதுமை மா யாழ்.செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளதாகவும் -

தற்போது அவை குடாநாட்டில் உள்ள பேக்கரிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் - தலைவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக, யாழ்.குடாநாட்டின் சில பிரதேசங்களில் பாணுக்கு தட்டுப்பாடு நிலவியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதனையடுத்து மாவுக்கு தட்டுப்பாடு நிலவியதாகக் கூறப்படும் பிரதேசங்களைச் சேர்ந்த பேக்கரிகளுக்குத் தேவையான அளவு கோதுமை மா விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாண் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக முறைகேடுகள், குறைபாடுகள் இருப்பின் தமது அலுவலகத்தில் முறையிடலாம் என்றும் பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (79)

கிராம அலுவலர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நேற்றுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக.20

வடக்கு-கிழக்கு கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் குடாநாட்டில் இடம்பெற்றுவந்த கிராம அலுவலர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நேற்றுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் செயலாளர் மா.மகேந்திரன் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, கிராம அலுவலர்களை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு சங்கம் அழைப்பு விடுத்திருந்தது. கிராம அலுவலர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கும்வரை அலுவலகங்களுக்குச் செல்வதில்லை என்று வடக்கு-கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கம் யாழ்.அரச அதிபரிடம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில்-

நேற்றுக்காலை யாழ்.அரச அதிபருக்கும், கிராம அலுவலர்களின் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கிராம அலுவலர்களின் பாதுகாப்புத் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதற்கு இணங்க நேற்றுடன் பகிஷ்கரிப்பை கைவிட்டுள்ளதாக சங்கத்தலைவர் பி.வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

பொதுமக்களின் அத்தியாவசிய நன்மை கருதி கிராம அலுவலர்கள் இன்று முதல் தமது வழமையான கடமைகளுக்குத் திரும்புவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (68-202)

பட்டினி நிலை தொடர்ந்தால் நிலைமை மோசமடையும்

சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக.20

குடாநாட்டில் பட்டினி நிலை தொடர்ந்தால் நிலைமை மோசமடையும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டின் இன்றைய நிலையை வெளிக்கொணரும் விதத்தில் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ். மாவட்டப் பிரிவு நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் வாழ்வியலை நடத்த முடியாத நிலையில் தவித்த வண்ணம் உள்ளனர். தொழிற்தடை, பொருள்தடை, பொருள் தட்டுப்பாடு, பொருள்களின் விலையேற்றம் மற்றும் அரச பயங்கரவாதச் செயற்பாடுகள் குடாநாட்டு மக்களை தொடர்ந்தும் துயரத்தினுள் ஆழ்த்தி வருகின்றது.

ஏ-9 பாதையினை மூடி குடாநாட்டினை திறந்தவெளி சிறைச்சாலையாக மாற்றி பட்டினியையும் பயங்கரவாதத்தினையும் அள்ளி துயரச் சுமைகளோடு மக்களை தவிக்க விட்டிருக்கின்றது அரசு.

குழந்தைகளும், இளம் பராயத்தினரும் போஷாக்கு [illegible] பெறாததால் ஆரோக்கிய நிலையில் இருந்து பின்தள்ளப்பட்டுச் செல்கின்றனர். பசியோடு பாடசாலைக்கு செல்கின்ற சிறார்கள் பாடசாலைகளில் மயக்கமுறுகின்றனர். ஆரோக்கியமான கற்றல் கற்பித்தலில் இருந்து குடாநாட்டு கல்விச் சமூகம் அப்பால் விலக்கி வைக்கப்பட்டுள்ளது. தாய்மார்கள் உரிய போசாக்கைப் பெற முடியாத நிலையில் உள்ளனர். இந்நிலையில் ஓர் ஆரோக்கியமற்ற சமூகம் உருவாவதற்கு ஏதுவான காரணிகள் அதிகரித்து காணப்படுகின்றன. இது ஒரு புறமிருக்க...

படுகொலைகள், கைதுகள்

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படைகளின் அராஜகச் செயற்பாடுகள் நிறுத்தப்படாது தொடர்ந்த வண்ணம் உள்ளன. நித்தமும் படுகொலைகள், கைதுகள், ஆள்கடத்தல்கள், மக்கள் மீது தாக்குதல்கள், பணப்பறிப்புக்கள், கொள்ளைகள் என்பன முழு வீச்சில் முன்னெடுக்கப்படுகின்றன.

கற்றலுக்காக போராடும் கல்விச் சமூகம் தொடர்ந்தும் அச்சுறுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள் மீதான அராஜகங்கள் தொடருகின்றன. பாடசாலை நிர்வாக விடயங்களில் தலையிட்டு மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றோரின் பாதுகாப்பினை கேள்விக்குறியாக்கியுள்ளனர்.

சர்வதேச நாடுகள் மௌனம் காப்பது ஏன்?

தொடர்ந்து வரும் இந்நிலையினை சர்வதேசம் மௌனமாய் பார்த்த வண்ணம் உள்ளது. குடாநாட்டு மக்களை தொண்டு நிறுவனங்களும் கைவிட்ட நிலையினையே பின்பற்றுகின்றன. குடாநாட்டில் உள்ள அதிகாரிகள் குடாநாட்டு நிலைமையினை வெளிக்கொண்டுவர அச்சத்தில் வாயடைத்து உள்ளனர்.

மஹிந்த அரசு குடாநாட்டு மக்களை துன்பத்தினுள் ஆழ்த்தி உலகத்தினை ஏமாற்றும் வகையில் குடாநாட்டில் எந்த விதமான பிரச்சினைகளும் இல்லையென பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றது.

குடாநாட்டு மக்களின் அவல நிலையினைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சர்வதேச நாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். தொண்டு நிறுவனங்கள் குடாநாட்டு மக்கள், பாடசாலை மாணவர்கள் போன்றோரினது ஆரோக்கியத்தின் மீது அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

பட்டினியையும், பயங்கரவாதச் செயற்பாடுகளையும் அரசு நிறுத்தாமல் தொடருமாக இருந்தால் அதன் பிரதிபலிப்புகளை அரசுப் படைகளும் எதிர்நோக்க வேண்டிவரும். மனிதப் பேரவலத்தை அரசு தொடருமானால் உலகின் முன் குற்றவாளியாக ஜனாதிபதி மஹிந்த நிறுத்தப்படும் நிலை மிக விரைவில் உருவாகும் - என்று உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு-கிழக்கில் மீண்டும் 'பாஸ்' நடைமுறை ஆட்சேபித்து கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஒக் 20

வடக்கு - கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் அங்கு 'பாஸ்' முறைகள் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள், அந்த விடயத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு கோரி ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவை கடிதம் மூலம் கோரியிருக்கின்றார்கள்.

இவ்விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 13 எம்.பிக்கள் ஒப்பமிட்டு கடிதம் ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ளனர். அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

''வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலிருந்து வரும் சகல வாகனங்களும் 'பாஸ்' பெறவேண்டும் என்ற நடைமுறையை மீண்டும் அறிமுகப்படுத்த பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பது எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை ஒக்டோபர் 20 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவிருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில், புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முன்னர் இருந்தமை போல 'பயண அனுமதி பாஸ்' முறையை மீண்டும் பாதுகாப்பு அமைச்சு கொண்டு வருகின்றது.

இந்த நடவடிக்கைகள் வடக்கு - கிழக்கு மக்களைப் பெரும் சிரமத்துக்குள்ளும், குழப்பத்துக்குள்ளும் ஆழ்த்தும் என்பது மட்டுமல்லாமல் அவர்களின் அடிப்படை உரிமைகளை முற்றாக மீறும் செயற்பாடுகள் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறோம்.

அவ்வாறு அடிப்படை உரிமை மீறல்கள் என அறிவிக்கும் தீர்ப்புகளும் ஏலவே உள்ளன.

ஆகவே, இந்த விடயத்தில் தலையிட்டு இந்த 'பாஸ்முறை', 'பயண அனுமதித் திட்டம்' போன்ற பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்.'' - என்று உள்ளது. (உ)

வவுனியாவில் 2 படையினர் பலி

வவுனியா, ஒக்.20

வவுனியா - பத்தினியாள் மகிழங்குளம் பகுதியில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் படையினர் இருவர் கொல்லப்பட்டனர். நேற்றுக்காலை 8.45 மணியளவில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினரை இலக்கு வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கிளைமோர் தாக்குதலில் படையினர் இருவரும் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இவர்களது சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

தமிழ்ச் சிறுபான்மையினரை வேறுபடுத்தும் மற்றொரு விடயம் உயர்நீதிமன்றத் தீர்ப்பு

இந்தியாவின் 'ஸ்டேட்ஸ்மென்' ஆங்கில ஊடகம் தெரிவிப்பு

புதுடில்லி, ஒக். 20

இணைந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு வழிகோரியுள்ள உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இலங்கைத் தீவில் தமிழ் சிறுபான்மையினரை வேற்றுமைப்படுத்துகின்ற மற்றொரு விடயமாகவே பார்க்கப்படுகிறது.

- இவ்வாறு இந்தியாவின் முன்னணி ஆங்கில ஊடகமான 'தஸ்டேட்ஸ்மென்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அப்பத்திரிகையில் வெளியாகிய செய்தியின் சாரம் வருமாறு:-

மிகவும் உணர்ச்சிபூர்வமான காலகட்டத்தில் - இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுக்கான திகதியை தீர்மானிக்கின்ற காலத்தில் - ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நிலையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரிக்க வேண்டும் என்று இலங்கை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ராஜீவ் காந்தி மற்றும் ஜெயவர்த்தனா இடையேயான 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த இணைப்பு செல்லாதது என்று இலங்கை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும் தனித்தனியான மாகாண சபைகளின் கீழேயே மக்கள் தங்களது அரசியல் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்ளலாம் என்றும் கூறியுள்ளது.

இந்த வழக்கானது திருகோணமலை மற்றும் அம்பாறையைச் சேர்ந்த இரு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களால் தொடரப்பட்டது.

1987ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் இந்த இணைப்பு தாற்காலிகமானது. அது மக்களின் வாக்கெடுப்பின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தத் தீர்ப்பை தற்போதும் ஆராய்ந்து கொண்டிருக்கும் இந்திய அதிகாரிகள், 'தவறான' நேரத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு என்று கூறியுள்ளனர்.

தமிழர்களின் வரலாற்றுப் பாரம்பரியமான இரு மாகாணங்கள் இணைக்கப்படுவதாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலப்போக்கில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் சிறுபான்மையினராகும் நிலை ஏற்பட்டது. கருத்து வாக்கெடுப்பு நடத்தினால் பிரிக்கக் கோரும் குழுவினர் வெற்றி பெறக்கூடும் என்கிற நிலையில் இனமோதல் மேலதிகமாக வெடிக்கும்.

கருத்து வாக்கெடுப்பு இல்லாமலேயே ஆண்டுதோறும் இலங்கை அரசதலைவர்களால் இந்த இணைப்பு நீடிப்புச் செய்யப்பட்டது. கடந்த நவம்பர் மாதம் இத்தகைய நீட்டிப்பு கடைசியாக செய்யப்பட்டது.

இலங்கைத்தீவில் தமிழ் சிறுபான்மையினரை வேற்றுமைப்படுத்துகின்ற மற்றொரு விடயமாக இந்தத் தீர்ப்பு உள்ளதாக இலங்கை பார்வையாளர்கள் கருதுகின்றனர் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ - 3)

ஐ.தே.கவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லான உத்தேச உடன்பாட்டின் நகல் பிரதி ஒன்று ஐ.தே.கட்சி தரப்பினால் நேற்றுமுன்தினம் இரவு அரசுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது.

அதில் சில திருத்தங்களைச் செய்ய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புகின்றார் என்றும் -

ஜனாதிபதியின் விருப்புக்கு அமைவிலான திருத்தங்கள் அடங்கிய நகல் உடன்பாடு நேற்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசுத் தலைமையால் சமர்ப்பிக்கப்பட இருந்தது என்றும் - மேலும் கூறப்பட்டது.

நேற்று ஜனாதிபதியை ஐ.தே.கவின் புதிய தவிசாளராகத் தெரிவாகியிருக்கும் ருக்மன் சேன நாயக்கா சந்திக்கவிருந்தார் எனவும் -

அப்போது அரசுத் தரப்பின் திருத்தத்துக்கு உட்பட்ட நகல் உடன்பாடு அரசிடம் சமர்ப்பிக்கப்பட இருந்தது எனவும் - மேலும் கூறப்பட்டது.

இந்த நகல் உடன்பாடு இரு தரப்பினராலும் இறுதியாக்கப்பட்டதும் பெரும்பாலும் எதிர்வரும் 23ஆம் திகதி - திங்களன்று - இரு கட்சிகளின் செயலாளர்களும் அதில் உத்தியோகபூர்வமாக ஒப்பமிட்டு உறுதிப்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

உடன்பாடு கையெழுத்தாகி ஒருவார காலத்துக்குள், ஐ.தே.கவினருக்கு இடமளிக்கும் வகையில் அமைச்சரவை மறுசீரமைப்பைச் செய்வதற்கு ஜனாதிபதி உத்தேசித்திருக்கின்றார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)

வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதை ஆதரிப்போம் என்று இலங்கை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். எனவே, இந்தியா இதில் தலையிட்டு உடனடியாக இணைப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவரும்படி இலங்கை அரசை வற்புறுத்தவேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கேட்டுக்கொள்கிறோம்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

வடக்கு - கிழக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்கு வந்தார். வாய்மூல விடைகளுக்கான கேள்வி நேரத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிக்கையை விடுத்தார். அவர் தனது உரையில் கூறியதாவது:-

''வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிரான உயர் நீதிமன்றத் தீர்ப்பு தற்போதைய சமாதான முன்னெடுப்புகளையும் பாதிக்கும். எனவே, இது குறித்து துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்தியாவும், சர்வதேச சமூகமும் இதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளன. வடக்கு - கிழக்கை இணைக்க முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாது போனால் இனப் பிரச்சினைக்கு ஒரே நாட்டுக்குள் தீர்வுகாண எடுக்கும் முயற்சிகள் நிரந்தரமாக இல்லாது போய்விடும். இது குறித்து கவனத்தை ஈர்ப்பதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த 7 ஆம், 18 ஆம் திகதிகளில் இச்சபையில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன மேற்கொண்ட வடக்கு - கிழக்கு இணைப்பை உயர்நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது. இலங்கையிலுள்ள சட்ட முறைமைகளின் படி இத்தீர்ப்புக்கு எதிராகச் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கவழியில்லை.

முன்னாள் ஜனாதிபதிகளான ஆர். பிரேமதாஸ, டி.பி. விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரது 18 வருடகால ஆட்சியில் இணைப்புக் குறித்த சர்வஜன வாக்கெடுப்பு வருடாந்தம் பின்போடப்பட்டு வந்தது.

1987 ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தம், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமி என்பதை அங்கீகரித்துள்ளது. இதன் அடிப்படையிலேயே வடக்கு - கிழக்கு இணைப்பு மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு - கிழக்கு பிரதேசம் தமிழ் பேசும் மக்களின் தாயகமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரதேசம். இந்நிலையில், இதனைப் பிரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எதிராக மூன்று தமிழ்ப் பிரஜைகள் நீதிமன்றில் இடையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்ய முயன்றபோது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

எமது கோரிக்கைக்கு இன்று வெள்ளிக்கிழமை பதிலிப்பதாக சபை முதல்வர் தெரிவித்தார். அரசு ஆராய்ந்து பதிலளிப்பதற்காக எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்குகின்றோம். அதுவரை நாடாளுமன்ற நிகழ்வுகளை நாங்கள் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளோம்.'' - என்று அவர் கூறினார். (ஐ)

படுகொலைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியம் சுதன் (வயது-32) என்பவரே உயிரிழந்தவராவார்.

மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தி சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பும் படி உத்தரவிட்டார். (1-15-78)

புத்தூரில்...

யாழ்ப்பாணம், ஒக்.20

புத்தூர் கிழக்கில் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் நேற்றுக்காலை 11 மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த நிலையத்தின் உரிமையாளர் கொல்லப்பட்டார்.

அந்த நிலைய உரிமையாளரான துரை சிங்கம் தவச்செல்வன் (வயது-31) என்பவரே உயிரிழந்தார்.

மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார். (1-15-78)

காலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை மேற்கொள்ள வந்த விடுதலைப் புலி உறுப்பினர் என்று கூறப்படும் ஒருவரின் சடலமே காலி துறைமுகக் கரையோரப் பிரதேசத்தில் கரையொதுங்கி இருப்பதாகக் கல்கிஸைப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

இத்தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து காலி நகரப் பகுதிகளில் தேடுதலை மேற்கொண்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் 31 பேரை விசாரணைக்காகக் கைது செய்தனர். அவர்களில் 21 பேர் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. ஏனைய 10 பேரும் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ஐ)

இயக்குனர் சபை பதவி விலகுவதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.20

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்கள் தமது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

09.08.2003இல் உருவாக்கப்பட்ட இயக்குனர் சபையே தொடர்ந்தும் பதவியில் உள்ளது என்றும் - புதிய இயக்குனர் சபையைத் தெரிவு செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை இழுத்தடிக்கப்படுவதாகவும் - இதனை அடுத்தே தாம் பதவி விலகும் தீர்மானத்தை எடுத்ததாகவும் - இயக்குனர் சபை அறிவித்துள்ளது.

ஒட்டோ சாரதியை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.20

சாவகச்சேரி நகரில் இருந்து வாடகைக்கு அமர்த்தி செல்லப்பட்ட ஒட்டோவின் சாரதியை காணவில்லை என்று மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒட்டோ வாடகைக்கு அமர்த்தப்பட்டு கொண்டு செல்லப்பட்டது என்றும்

பின்னர் குறிப்பிட்ட ஒட்டோ நேற்றுக்காலை சரசாலை - பருத்தித்துறை வீதியில் உள்ள கண்டல் காட்டுப் பகுதியில் தடம் புரண்ட நிலையில் காணப்பட்டது என்றும் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டது. ஒட்டோவின் சாரதியின் நிலை பற்றி தெரியவில்லை என்றும் கூறப்பட்டது.

மிருகவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சேர்ந்த அ.பெனடிக்ற் இரத்தினம் (வயது 62) என்பவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - யாழ்ப்பாணம் மற்றும் காரை நகர் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையே கடுமையான துப்பாக்கி சமர் இடம்பெற்றதாக இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. எனினும், சேதவிவரம் குறித்த தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (ஐ)

DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN ACCOUNTING PACKAGES
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN AutoCAD
Start On :- 20, 22.10.2006
Note :- வகுப்புக்கள் யாவும் கீழுள்ள புதிய முகவரியில் நடைபெறும்.
Softview Computer College
No. 55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

PERSONAL CLASSES
364, Stanly Rd
G.A.Q. B.A-I
B.A Final
யாழ்-பேராதனை வகுப்புகள் வழமையான நேரப்படி ஆரம்பம் 22.10.2006 காலை 9 மணி
தமிழ் - தங்கராஜா
ENGLISH - MAHESWARAN

அகதிகள் மற்றும் மனிதாபிமான விசா
ஆஸ்திரேலியா மற்றும் கனடா அரசினால் மனிதநேய அடிப்படையின் கீழ் வழங்கப்படும் நிரந்தர வதிவிட விசா விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே.: 222 7310

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
கலைப்பிரிவு
Eco.B.கதிரன்
TAM. குமுதை
LOG. கமல்
H/Calu. N.T.தரன்
Geo. மாது
HIST. பத்மன்
Po/Sci றொபின்சன்
Chri வசந்தன்
DRAMA ரமேஷ்
கிழமை நாள்களில் தினமும் வகுப்புகள் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட், [illegible] விதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.